Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 18

செவ்வாய்க்கிழமை
14 டிசெம்பர் 2021

கார்த்திகை 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 20

விலை: 30/=

**கொரோனா**
நேற்று 747
மொத்தம் 573,649

**உயிரிழப்பு**
நேற்று 27
மொத்தம் 14,641

**குணமடைவு**
545,433

## '13' முழுமையான அதிகாரப் பகிர்வில்லைதான் ஆனால் இப்போதைக்கு அதுவே சட்டப்பிடிமானம்!

### சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், டிசெ. 14
13ஆவது திருத்தம் என்பது முழுமையான அதிகாரப்பகிர்வு அல்ல என்பதை தமிழர் தரப்பு அன்றே ஏற்றுக்கொண்டது. ஆனால், அது ஒன்று மாத்திரம்தான் தமிழ் மக்களுக்குக் கிடைத்த சட்டபூர்வமான, அரசியல் சாசனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிகாரமாக இருக்கின்றது. அதனை நடைமுறைப்படுத்தும்படிதான் தமிழ் தரப்பில் இருக்கக்கூடிய பல கட்சிகளால் கோரிக்கை முன்வைக்கப்படுகிறது.
இவ்வாறு சுட்டிக்காட்டி 18 ▶

நாடாளுமன்ற அமர்வு நிறுத்தம்:

## உருவாகவுள்ளது ஸ்திரமற்றநிலை

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 14
நாடு இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ள சந்தர்ப்பத்தில் நாடாளுமன்ற அமர்வை நிறுத்துவதன் ஊடாக மேலும் நிச்சயமற்ற நிலைமைகள் உருவாகும் என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் 18 ▶

தடுப்பூசி பெற்றுக்கொள்ளாவிடில்

## இந்தமாத இறுதிக்குள் ஓமிக்ரோன் சுனாமி!



கொழும்பு, டிசெம்பர் 14
கடந்தகால படிப்பினைகளை ஞாபகத்திற்கொண்டு, அனைவரும், பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனில், இந்தமாதம் கொரோனா சுனாமியொன்றை, (ஓமிக்ரோன் சுனாமி ஒன்றை) எதிர்பார்க்கலாம் – என்று, இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார். 18 ▶

## இடைநிறுத்தப்பட்டது நாடாளுமன்ற அமர்வு!

(விரிவு 3ஆம் பக்கம்)

## முதலாம் திகதியிலிருந்து புதிய பஸ் நிலையம் இயங்கும்

யாழ்ப்பாணம், டிசெ. 14
ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நெடுந்தூர பஸ் நிலையத்திலிருந்து பஸ் சேவைகள் ஆரம்பமாகும் என்று, யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பட்ட பஸ் கம்பனிகளின் இணையங்களின் தலைவர் பொ. கெங்காதரன் குறிப்பிட்டுள்ளார்.
இது தொடர்பில் 18 ▶

மன்னாரில் மூழ்கிய

## மீனவர் ஒருவரின் சடலம் மீட்பு

### தேடுதல் தொடர்கிறது

மன்னார், டிசெ. 14
மன்னார் கோந்தைப்பிட்டி கடற்பரப்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு மீனவர்கள் 18 ▶

முச்சந்தி முரளி



'அப்ப மூண்டு ஊசியையும் எல்லாரும் போட்டால் உந்த கொரோனச் சுனாமி வராது கண்டியளோ..!"

யாழ்ப்பாணத்தில்

## கொரோனாவால் தாயொருவர் சாவு!

யாழ்ப்பாணம், டிசெ. 14
யாழ்ப்பாணத்தில், கொரோனாத் தொற்றுக்குள்ளாகிய 3 பிள்ளைகளின் தாய் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.
யாழ்ப்பாணம், அராலி - வசந்தபுரத்தைச் சேர்ந்த 38 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்தார்.
6 நாள்களாக அவருக்கு 18 ▶

கிளிநொச்சியில்

## ஆணைக்குழுவுக்கு எதிராகப் போராட்டம்

கிளிநொச்சி, டிசெ. 14
ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் திருப்தியில்லையெனத் தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களில் ஒரு பகுதியினர், ஆணைக்குழு அமர்வைப் புறக்கணிக்கும் வகையில் 18 ▶

## வவுனியாவில் முதியவர் சாவு!

### காரணம் தொடர்பில் சர்ச்சை

வவுனியா, டிசெ. 14
வவுனியாவில் முதியவர் ஒருவர் நேற்று திடீரென்று உயிரிழந்துள்ளார்.
அவர் இரண்டு தடுப்பூசிகளைப் பெற்று மூன்றாவதாக பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுச் 18 ▶

அதானிக்கு நாட்டை வழங்கும் அரசாங்கம்

## சிமெந்து தொழிற்சாலையை ஏன் மூடி வைத்திருக்கிறது?

### கேள்வியெழுப்புகிறது ஜே.வி.பி.

யாழ்ப்பாணம், டிசெ. 14
நாட்டை அபிவிருத்தி செய்கிறோம் என்று இந்தியாவின் அம்பானி, அதானி நிறுவனங்களுக்கு நாட்டை வழங்கிவரும் அரசாங்கம், யாழ்ப்பா 18 ▶

செலான் வங்கியில்
தங்கப்பவுணுக்கு அதிகபட்ச முற்பணத்தொகை
ரூ. 87 000/=
குறைந்த வட்டி வீதத்தில்
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது 0779811456 ஐ அழையுங்கள்
Brand Finance Rating "A+" Fitch Rating: "A"(lka)
செலான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி வெளிநாடு சென்றுள்ள நிலையில்

# சிரேஷ்ட அமைச்சர்களை சந்திக்கின்றார் மஹிந்த

கொழும்பு, டிசெ. 14

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வெளிநாடு சென்றுள்ள நிலையில், அரசின் சிரேஷ்ட அமைச்சர்களை இன்று காலை விசேட சந்திப்பொன்றுக்கு அழைத்துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச.**

அலரி மாளிகையில் முற்பகல் 10 மணிக்கு இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது. இந்தச் சந்திப்பின் காரணமாக அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் இன்றைய செய்தியாளர் மாநாடும் நடக்கும் வாய்ப்பில்லையென அரசின் உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (த-இ)

## கொரோனாவால் 60 கர்ப்பிணிகள் 89 குழந்தைகள் சாவு!

கொழும்பு, டிசெ. 14

கர்ப்பிணித் தாய்மார் 60 பேரும், 18 வயதுக்கு குறைவான சிறுவர்கள் 89 பேரும் கொரோனா மூன்றாவது அலையால் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பில், சுகாதார அமைச்சின் மகளிர் மற்றும் சிறுவர் சுகாதார பாதுகாப்பு பணிப்பாளர், விசேட மருத்துவ நிபுணர் சித்ரமாலி த சில்வா இந்தத்தகவலை தெரிவித்தார். (த-இ)




## பாண் நிறை மோசடி

கொழும்பு, டிசெ.14

ஒரு இறாத்தல் பாண் நிறை குறைவாக விற்பனை செய்யப்படுகின்றது என்று ஆதாரத்துடன் நுகர்வோர் முறைப்பாடு செய்துள்ளனர். கண்டி மடவளைப் பிரதேசத்தில் விற்கப்படும் பாணின் நிறை குறைவாக உள்ளது -என்று நுகர்வோர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

450 கிராம் நிறையுடைய பாண், இங்கு 270 கிராம் முதல் 290 கிராம் வரையேகாணப்படுகின்றது.

இது தொடர்பாக ஆதாரத்துடன் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று மக்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-4)

## ஒமிக்ரோன் முதலாவது உயிரிழப்பு!

லண்டன், டிசெ. 14

ஒமிக்ரோன் தொற்று காரணமாக பதிவான முதலாவது கொரோனா உயிரிழப்பு பிரிட்டனில் பதிவாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இந்த புதிய வைரஸ் காரணமாக ஏற்படும் உயிரிழப்புக்களைத் தவிர்ப்பதற்காக அனைவரும் பூஸ்டர் தடுப்பூசியை பெறவேண்டியது அவசியம் என பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் அறிவித்துள்ளார். (த-இ)

## யாசகம் பெற்றவருக்கு இரண்டு சொந்த வீடுகள்

கொழும்பு, டிசெ.14

யாசகம் பெற்ற பெண் ஒருவருக்கு,இரண்டு வீடுகள் சொந்தமாக இருப்பது பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தொழிலதிபர் ஒருவரின் ஏ.ரி.எம். அட்டையை மோசடி செய்த பெண் ஒருவர் மொரட்டுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். எகொட உயன பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகரின் ஏ.ரி.எம். அட்டையே மோசடி செய்யப்பட்டுள்ளது.

யாசகம் பெற்ற பெண், ஏ.ரி.எம். அட்டை தரையில் விழுந்திருந்த நிலையில் கண்டெடுத்துள்ளார். அவர் அதனைப் பயன்படுத்தி சலவை இயந்திரம், ரைஸ் குக்கர், ஆடைகள், மதுபானம் மற்றும் உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## வளவாளர்களிடம் விண்ணப்பம் கோரல்

சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையத்தில் பகுதி நேரமாக சங்கீதம்,வயலின் மற்றும் ஆங்கிலம் கற்பிப்பதற்கு வளவாளர்களிமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தகுதியுடைவர்கள், தமது சுயவிவரக்கோவையை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது. (ஒ-4)

## பல்கலைக்கழகங்கள் ஜனவரியில் ஆரம்பம்

கொழும்பு, டிசெ.14

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தற்போது 25 வீத மாணவர்கள் அழைக்கப்பட்டுள்ளதாக ஆணைக் குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், சில பல்கலைக்கழக விடுதிகளில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கியுள்ளதால், அவர்களை மீளவும் அழைத்தால் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களிடையே கொரோனாத் தொற்று பரவும் அபாயம் ஏற்படும் என்றும் தெரிவித்தார். (ஒ-ரி)

## விண்ணப்பம் கோரல்

கொழும்பு, டிசெ.14

கொழும்பு பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் தொடர்பாடல் ஊடக டிப்ளோமா ஒரு வருட கால கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. க.பொ. த. உயர்தரம் மூன்று பாடங்களில் சித்தி அல்லது க.பொ.த. சாதாரண தரத்தில் 6 சித்திகளுடன், 3 வருட அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும். தமிழ், ஆங்கிலம் , சிங்களம் ஆகிய மொழிகளில் கற்கை நெறி நடத்தப்படும். இதற்கு கல்விசார் வெளியீட்டுப்பிரிவில் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கலாம். (ஒ-4)

✦ ✦ ✦

யாழ். பல்கலைக்கழக பட்டப்படிப்பு பீடத்தால் இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தலில் பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டத்துடன் 3 வருட ஆங்கிலக் கற்பித்தல் தகைமையும், க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பலாம். மேலதிக விவரங்களை பெற்றுக் கொள்ள உதவிப்பதிவாளர் பட்டப்படிப்புக்கள் பீடத்துடன் 0212223608 எனும் தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொள்ளலாம். (ஒ-4)

## பருவப்பெயர்ச்சி மழை தொடரும்

கொழும்பு, டிசெ.14

நாடு முழுவதும் பருவப் பெயர்ச்சி மழையுடனான காலநிலை நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. கிழக்கு, வடக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் 50 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ-4)

## கொழும்பில் சில காணிகள் வெளிநாடுகளுக்கு குத்தகை

கொழும்பு, டிசெ.14

கொழும்பு மாவட்டத்தில் பெறுமதிமிக்க காணிகளை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான ஒப்பந்தங்கள் வரையப்பட்டுள்ளன என்று கொழும்பு ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தெமட்டகொடவில் 5 ஏக்கர் காணி இந்திய முதலீட்டாளர் ஒருவருக்கு குத்தகைக்கு விடப்பட்டு, அங்கு தனியார் மருத்துவமனைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது, சீனாவுக்கும், டுபாய்க்கும் இடையில் ஒரு கூட்டு முயற்சியாக, வீட்டுத் திட்டத்துக்காக 10 ஏக்கர் காணி குத்தகைக்கு விடப்படும்.

அதற்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வரையப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மேலும், கொழும்பு கோட்டையிலுள்ள காணியை மலேசிய முதலீட்டாளர் ஒருவருக்குக் குத்தகைக்கு விடுவதற்கான திட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

டி.ஆர். விஜேவர்தன மாவத்தையிலுள்ள 1.5 ஏக்கர் காணியை ஹோட்டல் மற்றும் வீடமைப்புத் திட்டத்துக்காக ஈன் நிறுவனமொன்றுக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கு தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் நிறுவனமொன்று கட்டுநாயக்கா மற்றும் காலியில் பல காணிகளில் முதலீடு செய்யவுள்ளது. மற்றொரு நிறுவனம் ஜாஎலவில் பல காணிகளில் முதலீடு செய்யவுள்ளது என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற அமர்வை இடைநிறுத்திய கோத்தா

## முக்கியமான நகர்வுகளை மேற்கொள்வதற்குத் திட்டம்

**கொழும்பு, டிசெ.14**

**முக்கியமான சில அரசியல் நகர்வுகளுக்காகவே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் நாடாளுமன்றக் கூட்டத்தொடர் இடைநிறுத்தப்பட்டுள்ளது என அரசியல் வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது. அடுத்த வருடம் அதிரடியான சில மாற்றங்கள் இடம் பெறவுள்ளன எனவும் தெரியவருகின்றது.**

நாடாளுமன்றக் கூட்டத் தொடரை நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் இடைநிறுத்தும் விதத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் விசேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிவித்தலின் பிரகாரம் புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் 2022 ஜனவரி 18 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்று சபைக்குத் தலைமை தாங்கி, புதிய கூட்டத்தொடரை ஜனாதிபதியே சம்பிரதாயப்பூர்வமாக ஆரம்பித்து வைக்க வேண்டும். அரசமைப்பின் 70 (1) உறுப்புரிமைக்கமைய நாடாளுமன்றக் கூட்டத்தொடரை இடைநிறுத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது.

அவ்வாறு நாடாளுமன்றம் இடைநிறுத்தப்படும் நாளில் இருந்து, இரண்டு மாதங்களுக்கு மேற்படாத வகையில் நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமாக வேண்டும். நாடாளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்பட்டாலும் அந்தக் காலப்பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிநிலை பாதுகாக்கப்படும்.

சபாநாயகரும் தொடர்ந்து செயற்படுவார். நாடாளுமன்றத்தில் ஏற்கனவே செயற்பட்ட தெரிவுக்குழுக்கள் புதிய அமர்வின் ஆரம்பத்தில் மறுசீரமைக்கப்படும். இதன்போது கோப் மற்றும் கோபா உள்ளிட்ட முக்கிய குழுக்களும் கலையும். புதிய அமர்வின்போது புதியவர்கள் பெயரிடப்படவேண்டும்.

கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைவர்கள் மிகவும் சிறப்பான முறையில் செயற்பட்டு, அரச நிறுவனங்களிடம் கேள்விக்கணைகளைத் தொடுத்து வருகின்றனர். இதனால் நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. கோப் குழுவின் தலைவராக சரித ஹேரத்தும், கோபா குழுவின் தலைவராக திஸ்ஸ வித்தாரனவும் செயற்பட்டு வருகின்றனர். இந்த இருவரின் பதவிகளும் மாற்றப்படவுள்ளன.


அதற்காகவே நாடாளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்படுகின்றது எனவும் கூறப்படுகின்றது. அதேவேளை, 2022 ஜனவரியில் அமைச்சரவையும் மறுசீரமைக்கப்படவுள்ளது. (எ-இ)

# சங்கானைப் பகுதியில் குழுவொன்று அடாவடி!

## உடைமைகள் அடித்துச் சேதம்

யாழ்ப்பாணம், டிசெ. 14

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கானைப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த குழு அங்கிருந்த பொருள்களை அடித்து நொருக்கிவிட்டுத் தப்பிச்சென்றுள்ளது. முச்சக்கர வண்டிக்குத் தீமூட்டிய போதிலும் மழை பெய்த காரணத்தாலும், வீட்டில் உள்ளவர்கள் சமயோசிதமாகச் செயற்பட்டமையாலும் பெரும் இடர் தவிர்க்கப்பட்டுள்ளது. இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் கொண்ட குழுவே இந்தச் செயலைச் செய்துள்ளது. குறித்த வீட்டின் குடும்பத் தலைவருக்கும் பிறிதொருவருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளால் இந்தத் தாக்குதல் நடந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.



இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-125,27,319)

# வடக்கு மீனவர்களை அரவணைக்கும் சீனா

யாழ்ப்பாணம், டிசெ. 14

சீனத் தூதரகத்தின் அன்பளிப்பில் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன. இதற்காக சீனாவின் தூதுவர் வடமாகாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

இந்தத் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணத்தில் 800 மீனவர்களுக்கு வலைகள் வழங்கப்படுவதோடு 2 ஆயிரம் மீனவர்களுக்கு நிவாரணப் பொதிகளும் வழங்கப்படவுள்ளன.

இதேநேரம் மன்னார் மாவட்ட மீனவர்களில் 700 பேருக்கு நிவாரணப் பொதிகளும் 150 பேருக்கு வலைகளும் வழங்கப்படவுள்ளன. (ம-27)

# 20 ரூபாவால் குறைந்தது 1 கிலோ அரிசியின் விலை

கொழும்பு, டிசெ. 14

ஒரு கிலோ அரிசியின் மொத்த விலை 20 ரூபாவால் குறைந்துள்ளதாக அரிசி இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொன்னி, சம்பா அரிசியின் மொத்த விலை கிலோ 120 ரூபாவாகவும், நாட்டு அரிசியின் மொத்த விலை கிலோ 110 ரூபாவாகவும், வெள்ளைப்பச்சை அரிசியின் மொத்தவிலை கிலோ 98 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், [illegible] பில் உ[illegible] அரிசிக்கான இறக்குமதி தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எலும்புத் துண்டைப் போட்டால் அதுக்கேத்தபடி வாலாட்டத்தானே வேணும். இல்லாட்டி, போட்ட எலும்பும் இல்லாமல் போயிடுமே. அப்பிடித்தான் கனபேர் இஞ்ச நடக்கினம். குறிப்பா திண்ணையில கிடந்திட்டு, திடுக்கெண்டு யோகமடிச்சு மேயராகி, பிறகு ஜனாதிபதி ஆணைக்குழு பதவியும் கிடைச்ச அம்மணி வஞ்சகம் இல்லாமல் வாலாட்டுறா எண்டது எல்லாருக்கும் தெரியும். ஆனால் நீங்கள் எலும்பைக் கவ்விறதுக்காக எதுக்கு பாவப்பட்ட சனங்களின்ர கண்ணீரோட விளையாடுறீங்கள்? எண்டு காணாமல் ஆக்கப்பட்டவையின்ர உறவுகள் கேக்கினம். முந்தி நியமிச்ச ஆணைக்குழுக்கள் எல்லாம் சரியா இயங்கினதா? அதுகளின்ர முடிவுகள் சரியா? அதில சொல்லப்பட்ட சிபாரிசுகள் எல்லாம் நடைமுறைக்கு வந்திருக்கா? எண்டெல்லாம் அறிய புதிசா இன்னொரு ஆணைக்குழுவை கோத்தா நியமிச்சவர். சிலவேளை இப்ப நியமிச்ச ஆணைக்குழு சரியாச் செயற்பட்டதா எண்டு அறிய நாளைக்கே இன்னொரு ஆணைக்குழுவை நியமிச்சாலும் அதிசயமில்லை. இந்த ஆணைக்குழுவில வீணைக்கட்சி அம்மணிக்கு ஒரு இடம் குடுத்தவை. தமிழருக்கும் அந்த ஆணைக்குழுவில இடம் குடுக்கோணும் எண்டதுக்காகத்தான் அவாக்கு அந்தப் பதவி. ஆனால் ஒரு சிங்களவர் கூட செய்யாத இனத்துரோகத்தை அவா செய்யிறா எண்டு சனம் திட்டோ திட்டெண்டு திட்டுதுகள். அந்தளவுக்கு கீழ்த்தரமான வேலையளை அவா செய்யிறா.

கொஞ்சநாளைக்கு முதல் ஞானசார தேரரின்ர ஒரேநாடு ஒரே சட்டம் செயலணிக்கும் இந்த யோகமடிச்ச அம்மணி, காணாமல் ஆக்கப்பட்டவையின்ர உறவுகளை வேற ஏதோ சொல்லிக் கூட்டிக்கொண்டு போய் மாட்டிவிடப் பார்த்தவாவாம். அதைப் பற்றி போன 10 ஆம் திகதி மனித உரிமைகள் தினமண்டு நடந்த போராட்டத்தில காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின்ர சங்கக்காரர் பப்ளிக்கா சொன்னவை.

அதுக்குப் பிறகும் இவா தன்ர குணத்தை மாத்தேலை. முந்தநாள் வந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின்ர அமர்வுக்கு, தன்ர கட்சிக்கு சார்பான சிலரை மட்டும் வரச் சொல்லி இருக்கிறா. தங்கட கட்சி மூலமாயும், ஓ.எம்.பி அலுவலகம் மூலமாயும் இந்த அலுவல் நடந்திருக்கு. புலிகளுக்கு எதிரா கதைக்கச்சொல்லி சிலரை ஏற்பாடு செய்து, அவை எப்பிடி கதைக்க வேணும் எண்டும் எழுதிக் குடுத்து, அதின்படிதான் அண்டைக்கு சிலர் சாட்சியமும் குடுத்தவை. அப்பிடி சாட்சியம் குடுத்தவைக்கு சில 'கவனிப்புகள்' இருக்காம். அதை நம்பித்தான் அதுகளும் அப்பிடி இல்லாததையெல்லாம் சாட்சியம் எண்டு குடுத்தவை. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிக்கணத்துக்கான ஆணைக்குழு அமர்வு நடக்கேக்க, ஆமியும் ஒட்டுக்குழுக்களும் சுத்திவர நிக்கேக்க கூட, 'எங்கட பிள்ளையளை ஆமிதான் பிடிச்சது, எங்கட பிள்ளையை ஈ.பி.டி.பி.தான் கடத்தினது' எண்டு பயப்பிடாமல் எங்கட சனம் சாட்சியம் சொன்னது. அதுமாதிரி இப்பவும் நடந்து தங்கட பிளான் பாழாகக்கூடாது எண்டுதான் , சிலரை செட் பண்ணி கொண்டந்து, காதும் காதும் வைச்ச மாதிரி ஆணைக்குழு அமர்வை ரகசியமா நடத்தியிருக்கினம். ஆனால் இப்பிடி ஒரு அமர்வு நடக்கப் போற விசயம் , லீக்காகி உண்மையாவே பாதிக்கப்பட்ட தரப்பில சிலரும் உள்ளுக்க போட்டினம். அவை ஆமிக்கும், ஒட்டுக்குழுக்களுக்கும் எதிராச் சாட்சியம் குடுக்க, செட்டிங் செய்த அம்மணிக்கு முகம் கறுத்துப்போச்சாம். 'நான் ஏதோ திட்டம் போட இதுகள் திடீரெண்டு வந்து குழப்பிட்டுதுகளே' எண்டு அவாக்கு கவலை இருக்கும் தானே.

"ஏன் பாதிக்கப்பட்டவையை ஆணைக்குழு அமர்வுக்கு கூப்பிடேலை?" எண்டு மீடியாக்காரர் கேக்க, நாங்கள் ஆருக்கும் அழைப்பு அனுப்பேலை. செய்தியும் போடேலை, விளம்பரமும் குடுக்கேலை. ஆனால் சனத்துக்கு இஞ்ச இப்பிடி அமர்வு நடக்குது எண்டு தெரியும். தெரிஞ்சவை வந்திருக்கினம் எண்டு அம்மணி விட்டாவே ஒரு ரீல். அப்பிடியெண்டால் "எப்ப ஆணைக்குழு வருகுதெண்டு?" சனங்கள் வெத்திலையில மை போட்டு பார்த்துக் கொண்டிருக்கினமோ. ஆக்களைக் கூப்பிட்ட விசயத்திலையே இவ்வளவு உருட்டுப் பிரட்டு எண்டா, உந்த ஆணைக்குழுவின்ர அறிக்கை எப்பிடி இருக்கும்?



- பட்சி

# உண்டியல் வர்த்தகத்தால் பெருமளவு நிதி முடக்கம்!

*மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிப்பு*

**கொழும்பு, டிசெ. 14**

**உண்டியல் நிதி வர்த்தகத்தை முன்னெடுத்துச்செல்ல இடமளிக்கப்படவேண்டுமென அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார். அப்படியானால், இந்த வர்த்தகத்துடன் அந்த அமைச்சரும் சம்பந்தப்பட்டிருக்கவேண்டும். உண்டியல் வர்த்தகத்தால்தான் நாட்டுக்கு வரவேண்டிய பெருந்தொகைப் பணம் முடக்கப்பட்டுள்ளது -என்று தெரிவித்தார் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால்.**



ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டுக்குள் வெளிநாட்டுப் பணம் வரவில்லை என்பதையே நான் கூறினேன். வேறு இடத்தில் வியாபாரிகள் அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இலங்கைக்கு வரவேண்டிய வெளிநாட்டுப் பணத்துக்கு இணையாக நாட்டுக்குள் பணம் செலுத்தப்பட்டுள்ளது.

அந்நியச் செலாவணி வராமல், பெருந்தொகையான பணத்தை நாட்டுக்குள் செலுத்த முடிந்த வர்த்தகம் என்ன என்பதை நினைக்கும் போது விடயம் தெளிவாகும். சாதாரண வர்த்தகர் ஒருவர் ஊடாக இவ்வாறு பெருந்தொகையான பணத்தை பரிமாற்றம் செய்ய முடியாது.

300 மில்லியன் டொலருக்காக ஒரு டொலருக்கு 240 ரூபா வீதம் செலுத்தினால், 7 ஆயிரத்து 200 கோடி ரூபாயை சம்பாதிக்க முடிந்த ஒரே வர்த்தகம் போதைப் பொருள் வர்த்தகம். உண்டியல் வர்த்தகத்தை நடத்திச் செல்ல இடமளிக்க வேண்டும் என்று ஓர் அமைச்சர் கூறியதை நான் பார்த்தேன்.

அவரும் அந்த வியாபாரத்துடன் சம்பந்தப்பட்டுள்ளார் என்பதை இதன் மூலம் புரிந்துகொள்ள முடிகிறது. இல்லை என்றால், அவர் அந்த வர்த்தகத்துக்கு உதவி செய்பவராக இருக்கலாம் -என்றார். (ம)

# இழப்பீடு வேண்டாம் எம் உறவுகள் எங்கே?

*ஆணைக்குழு முன் மக்கள் கேள்வி*

யாழ்ப்பாணம், டிசெ.14

எமக்கு இழப்பீடுகள் வேண்டாம், காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை நாம் அறிய வேண்டும் என்று ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் சாட்சியமளித்த பெரும்பாலான மக்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அமர்வுகள் நடந்தன என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த அமர்வுக்குத் தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு சாட்சியப்பதிவு நடத்தப்பட்டது என்று பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டுக்கின்றனர்.

அமர்வு நடைபெற்ற இடத்தில் இருந்த மக்களிடம் கேட்டபோது, ஆணைக்குழு அமர்வு தொடர்பாக அறிவிக்கப்படவில்லை என்றும், எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது என்ற தகவல் கிடைத்தே இங்கு வந்தோம் என்றும் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது என்று அறிந்தோம். அதற்காகவே இங்கு வந்தோம். ஆனால் இங்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் எதுவும் நடக்கவில்லை. நாம் சாட்சியப் பதிவுக்கு ஆயத்தமாக வரவில்லை. அவ்வாறு வந்திருந்தால் ஆதாரங்களை எடுத்து வந்திருப்போம்.

ஓம்.எம்.பி. அலுவலகத்தில் பதிவு செய்தீர்களா? என்றுதான் அனைவரிடமும் கேட்டார்கள். எங்களுக்கு என்ன இழப்பீடு வேண்டும் என்று மட்டுமே கேட்டார்கள்.

இழப்பீடு தொடர்பாக நாம் கதைப்பதற்கு முன்னர், காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பது எமக்குத் தெரியவேண்டும். இராணுவம் பிடித்துச் சென்றது எமக்குத் தெரியும். அதற்குச் சாட்சியாக நாங்கள் இருக்கின்றோம். எமக்குப் பதில் வேண்டும் என்று அவர்களிடம் கூறினோம். இழப்பீடுகள் எமக்கு வேண்டாம், எமது உறவுகள்தான் வேண்டும் என்று அழுத்தமாகத் தெரிவித்தோம். எங்கள் இறுதிக்காலத்தில் எங்கள் உறவுகள் எம்மோடு இருக்கவேண்டும் என்று அங்கிருந்த பலர் கண்ணீரோடு தெரிவித்ததை அவதானிக்க முடிந்தது.

பல ஆணைக்குழுக்களில் பதிவுகளைச் செய்துள்ளோம். ஆனால் எந்தப் பயனும் இல்லை, யாரும் உதவுவதாகவும் இல்லை. எங்கள் உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ள நிலையில், வாழ்வாதார ரீதியிலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம். எமக்கு உதவிகளை வழங்க வேண்டும் என்றும் சிலர் தெரிவித்தனர். (எ-7)

# தலையாட்டி பற்றிக் கேட்டறிந்த ஆணைக்குழு உறுப்பினர்கள்!

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அமர்வு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில்நடைபெற்றது என்று கூறப்பட்ட நிலையில், அமர்வில் கலந்துகொண்ட ஆணைக்குழு உறுப்பினர்கள் "தலையாட்டி" என்றால் யார் என்று கேள்வி எழுப்பினர் என்று தெரிவிக்கப்பட்டது. ஆணைக்குழுவில் சாட்சியமளித்த பெண் ஒருவர், தனது சகோதரன் காணாமல் ஆக்கப்பட்ட காலப்பகுதியில் தலையாட்டி ஒருவர் தங்கள் ஊருக்கு வந்திருந்தார் என்று கூறியுள்ளார். அப்போது தலையிட்ட ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர் "தலையாட்டி" என்றால் யார்? அது தொடர்பாக முதலில் கூறுங்கள் என்று கேட்டுள்ளார்.

ஆணைக்குழுவில் உள்ள பெண் உறுப்பினர் அது தொடர்பில் ஏனைய உறுப்பினர்களுக்கு விளக்கியு ள்ளார். அதில் சரியான விளக்கம் கிடைக்காததால் ஆணைக்குழு உறுப்பினர்கள் சாட்சியமளிக்க வந்தவர்களிடம் கேட்டுள்ளனர். சாட்சியமளிக்கச் சென்றவர்கள் சைகை மூலம் "தலையாட்டி" என்றால் என்ன என்று விளக்கமளித்துள்ளனர். அதன்பின்னர் ஆணைக்குழு உறுப்பினர்கள் சாட்சியப் பதி வைத் தொடர்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)



# வீதியை சீரமைக்கக் கோரி மக்கள் மறியல் போராட்டம்

வவுனியா,டிசெ.14

வவுனியா, ஓமந்தை பொற்கோவிலுக்குச் செல்லும் பிரதான வீதியைச் சீரமைக்குமாறு கோரி, அங்குள்ள மக்கள் வாகனங்களை வழிமறித்து நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். கிரேசர் ஒன்றிலிருந்து அகழப்பட்டு வரும் கற்களைக் கொண்டு செல்லும் கனரக வாகனங்களால் இந்த வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளது. இதனால் பல்வேறு அசௌகரியங்களைச் சந்திக்கின்றோம் .

வீதி சீரமைப்பதற்குரிய உத்தரவாதம் அளிக்கப்படும் வரையில் தமது போராட்டம் தொடரும் என்று தெரிவித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.(ஒ-4,110)



## கிளிநொச்சியில்
# வெடிக்காத நிலையில் வெடிபொருள்கள் மீட்பு

கிளிநொச்சி, டிசெ. 14

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரந்தன் பகுதியில் வெடிக்காத நிலையில் இரண்டு வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து அந்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் நீதிமன்ற அனுமதியைப் பெற்று வெடிபொருள்களை அகற்றினர். (ம-113)

# யாழில் நேற்றுமுதல் பூஸ்டர் டோஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 14

30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் டோஸ் தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.



யாழ். மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. 30 வயதுக்கு மேற்பட்டவர்கள், தெரிவுசெய்யப்பட்ட தொழிலாளர்கள், நோய் பரவுவதற்கு அதிக ஆபத்து உள்ளவர்கள், சுகாதாரத்துறை சாராத முன்னிலை ஊழியர்கள் ஆகியோருக்கே மேற்படி தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன.

இரண்டு தடவைகள் தடுப்பூசிகளைப் பெற்றவர்களில் எவருக்காவது கொரோனா ஏற்பட்டிருந்தால், கொரோனாத் தொற்று ஏற்பட்ட திகதியிலிருந்து ஆறுமாதகால இடைவெளியில் இந்தத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும். (ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்ணீருக்குப் பதில் சொல்வார்களா..?

யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, விசித்திரமான சாட்சியப் பதிவு ஒன்றை நடத்திச் சென்றிருக்கின்றது.

போரைக் கொடூரமான முறையில் முடிவுக்குக் கொண்டு வந்த இலங்கை அரசின்மீதும், இலங்கை இராணுவத்தினர்மீதும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள், போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இறுதிப் போரின்போது பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். பலர் காணாமல் ஆக்கப்பட்டனர். அதற்கான ஆதாரங்களை பல சர்வதேச அமைப்புக்களும், ஊடகங்களும் வெளிக்கொணர்ந்திருந்தன.

கடந்த காலங்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில், இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. இலங்கை அரசும் பொறுப்புக்கூறலுக்கான வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. ஆனால், அவை நிறைவேற்றப்படவில்லை.

இலங்கையில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக மூண்டெரிந்தபோர், மூர்க்கத்தனமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபோது நாட்டின் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்சவும், பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தாபய ராஜபக்சவும் இப்போது முறையே - பிரதமர், ஜனாதிபதி பதவிகளில் இருக்கின்றனர். ராஜபக்சவினர் மீண்டும் ஆட்சிக்கு வந்தபின்னர், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கியிருந்த தீர்மானத்தில் இருந்து வெளியேறியிருந்தது.


ராஜபக்சஅரசு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இருந்து விலகியபோதும், சர்வதேசத்தின் அழுத்தங்களில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக சர்வதேச நாடுகளை ஏய்ப்பதற்காக சில கைங்கரியங்களை முன்னெடுத்தது. அதில் ஒன்றுதான் புதிதாக உருவாக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு.

இறுதிப்போரில் நடந்த மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக சர்வதேச நீதி விசாரணையை மறுத்து வரும் ராஜபக்சவினர், உள்நாட்டுப் பொறிமுறை ஊடாகவே விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று தொடர்ச்சியாகக் கூறி வருகின்றனர். பொறுப்புக்கூறலுக்கான உள்ளகச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன என்று சர்வதேசத்துக்குக் காட்டும் அதேநேரம், தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவித்துக் கொள்ளவும் முயற்சிக்கின்றனர்.

தமிழர் தரப்பிலும் தவறுகள் நடந்துள்ளன என்ற கருத்துருவாக்கத்தைச் செய்வதன் ஊடாக சர்வதேச நாடுகளுக்கு தமிழர் தரப்பு கொடுக்கும் அழுத்தங்களைக் குறைக்கமுடியும் என்று நம்பும் ராஜபக்சவினர், ஆணைக்குழு அமைத்து, அதன்மூலம் அந்தக் கைங்கரியத்தை தொடங்கியிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் நடந்த ஆணைக்குழுவின் அமர்வும் அந்த நிகழ்ச்சி நிரலிலேயே நடத்தப்பட்டுள்ளது என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

தெரிந்தெடுக்கப்பட்ட தரப்பினரை சாட்சியப் பதிவுக்கு அழைத்து, சாட்சியங்களைப் பதிவு செய்திருக்கின்றது ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு. சாட்சியமளிக்கவென அழைத்து வரப்பட்டவர்களில் பலரும் என்றுமில்லாதவாறு தமிழீழ விடுதலைப் புலிகளை நோக்கிக் கையைக் காட்டியிருக்கின்றனர். படைத்தரப்பும், ஒட்டுக்குழுக்களும் செய்த கொடூரங்கள் மறைக்கப்பட்டிருக்கின்றன.

அரசின் இந்த நிகழ்ச்சி நிரலுக்கு, ஒத்தூதிப் பிழைக்கும் சில தமிழ்த் தரப்புக்களே கதை, திரைக்கதை, வசனம் என்பவற்றை எழுதி, பேரினவாத அரசுக்கு வெள்ளையடிக்க முற்படுகின்றனர். கடந்த காலங்களில் செய்த தங்களின் அட்டூழியங்கள் தெரியவந்துவிடலாம் என்ற அச்சமும் ஒட்டுக்குழுக்களின் இந்தச் செயற்பாட்டுக்கு காரணமாக இருக்கலாம். இத்தகைய கோடரிக் காம்புகளாலேயே தமிழினம் இன்னும் தலைநிமிர முடியாதிருக்கின்றது. ஆயினும், தங்கள் கண்முன்பாக உறவுகளை இழந்து, காணாமற்போன தங்கள் உறவுகளின் நிலையை எண்ணி நித்தமும் தவித்துக் கொண்டிருக்கும் தமிழ் மக்களின் கண்ணீருக்கும் செய்த அத்தனை அநியாயங்களுக்கும் ஒருநாள் அவர்கள்தாம் பதில் சொல்லியே ஆக வேண்டும்...!



# அந்நியநாட்டு அழுத்தத்தை கோருவது முட்டாள்தனமாம்!

## ஆனந்தசங்கரி அறிக்கை

**யாழ்ப்பாணம், டிசெ.14**

**அந்நிய நாடுகளின் அழுத்தத்தைப் பிரயோகிக்கக் கோருவது முட்டாள்தனமான செயற்பாடு. இது உள்ளூர் அரசியல்வாதிகளையும், பெரும்பான்மையின கடும் போக்காளர்களையும் கோபமடையச் செய்யும் செயலாகும்.**

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது,-

ஒரு சில கட்சிகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தமிழ் பேசும் கட்சிகளின் ஒருமித்த தீர்மானம் என்று ஊடகங்கள் முடிசூடுவதை நிறுத்த வேண்டும். ஒருசில கட்சிகள் இணைந்து எடுத்திருக்கும் முடிவு, தமிழ் மக்களுக்கு மேலும் ஆபத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்தும் என்பதை அந்தக் கட்சிகளின் தலைவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

அந்நிய நாடுகளின் தலையீட்டைக் கோருவது, அந்த நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையிலான புரிந்துணர்வைச் சிதைக்கும் செயற்பாடாக அமைந்துவிடும்.

எந்தக்கட்டத்திலும் சமஷ்டி என்ற பேச்சுக்கு இடமில்லை என்று அனைத்துத் தரப்பினரும் தெரிவித்த பின்னரும், சமஷ்டியைப் பெற்றே தீருவோம் என்று மக்களை ஏமாற்றுவதை நிறுத்தவேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி அன்று தொட்டு, இன்றுவரை இந்திய முறையிலான ஓர் அரசியல் தீர்வையே முன்வைக்கின்றது. அதற்கு மேலாக இந்தியாவும் எமக்கு எதையும் பெற்றுத்தரப்போவதில்லை. இலங்கையிடம் சமரசமாகப் பேசி அதைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதே சாலச் சிறந்ததாகும் - என்றுள்ளது. (எ-இ)

# பங்காளிகள் பேச்சை கேட்பதில்லை அரசு!

## திஸ்ஸ விதாரண குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ.14

ஆட்சியில் அரசு பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடி எந்த முடிவுகளையும் எடுப்பதில்லை என்று லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ விதாரண குற்றஞ்சுமத்தியுள்ளார்.

தலவாக்கலை, அக்கரபத்தனையில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது எம்முடன் கலந்துரையாடிச் சில தீர்மானங்களை எடுத்தார். ஆனால் அவ்வாறான நடைமுறையை நடப்பு அரசில் காண முடியவில்லை. தற்போதைய நிலையில் நாட்டின் பொருளாதாரம் சரிவை நோக்கிப் பயணிக்கின்றது. அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தால் மக்கள் சிரமப்படுகின்றனர் இவ்வாறான பல பிரச்சினைகள் உள்ளன.

இவை தொடர்பில் கதைக்க எமக்குச் சந்தர்ப்பம் இல்லாது உள்ளது. எனக்கு உறுதியளித்தபடி அமைச்சரவையில் எனக்கு எந்தவித பொறுப்பும் வழங்கப்படவில்லை. நான் சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமே.

அமைச்சரவையில் எடுக்கும் முடிவுகளுக்கு ஆலோசனை வழங்கவும் முடியாதுள்ளது. மக்கள் சிரமத்துக்குள் விழுவதைத் தடுக்க என்னிடம் பல யோசனைகள் உள்ளன. எனது ஆலோசனைகள் ஏற்கப்பட்டிருக்குமானால் நிலைமை கடினமாக இருந்திருக்காது- என்றார். (எ-இ)

நாளை 15.11.2021
புதன்கிழமை
கார்த்திகை 29
சுபநேரம் : பி.ப. 04.51 - பி.ப 06.21
ராகுகாலம்: பி.ப. 12.21 -பி.ப. 01.51

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எரிவாயு நிறுவனங்களுக்கு எதிராக விரைவில் வழக்கு

கொழும்பு,டிசெ.14
எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில், எரிவாயு நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் -என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.
நுகர்வோர் விவகார அதிகாரசபையின் சட்டப் பிரிவு, வழக்குத் தொடர்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இது குறித்து சட்ட மா அதிபரின் ஆலோசனையும் பெற்றுக் கொள்ளப்படும்.
அதேவேளை எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் மொறட்டுவ பல்கலைக்கழக நிபுணர்களின் ஆய்வு அறிக்கை இந்த வாரம் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(ஒ-4)

# பூஸ்டர் தடுப்பூசி பெற்றவர்கள் அறிகுறிகளுக்கு அஞ்சாதீர்

## மருத்துவர் ஆலோசனை

**கொழும்பு, டிசெ.14**
**கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான மூன்றாவது டோஸான பைஸர் அல்லது பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றவர்கள், சிறியநோய் அறிகுறிகள் தென்படின் கவலைப்படத் தேவையில்லை என்று சிறப்பு மருத்துவர் மல்காந்தி கல்ஹேனா தெரிவித்துள்ளார்.**

குறித்த தடுப்பூசி உடலில் செயற்படுத்தப்படுவதால், சிறிய அறிகுறிகள் ஏற்படுகின்றன. இந்த அறிகுறிகள் மூன்று நாள்கள் வரை தோன்றும். உடல்வலி, தலைவலி, குமட்டல் அல்லது வாந்தி போன்றவை இதன் அறிகுறிகளாகும். இதனால் எவரும் பயப்படவேண்டாம். தடுப்பூசியால் ஏற்படக்கூடிய சில அறிகுறிகள் இவை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)

## உளவளத்துணை முதுமாணிக் கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

களனிப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படுகின்ற ஆயுள்வேத உளவளத்துணை முதுமாணிக் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஆங்கிலமொழி மூலம் நடத்தப்படும் இந்தக் கற்கைநெறிக்கு உளவியல், உளவளத்துணை சிறப்புப்பட்டம், ஆயுள்வேத சத்திரசிகிச்சைமாணிப் பட்டம், மேலைத்தேய மருத்துவமாணிப்பட்டம், சமூகவியல், மெய்யியல் சிறப்புப் பட்டம் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். மேலதிக தகவல்களை 0113051085 அல்லது 011 2809321 அல்லது 011 2809322 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
(ச)






## கொக்குளாய் பொலிஸ் நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது!

முல்லைத்தீவு, டிசெ. 14
முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குளாய்ப் பகுதியில் புதிய பொலிஸ் நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.
முல்லைத்தீவு பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.அமரசிங்க தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர ஜெகத் பளிகக்கார சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பொலிஸ் நிலையத்தைத் திறந்துவைத்தார்.
இந்த நிகழ்வில் கிளிநொச்சி பொலிஸ்மா அதிபர் ஜே.எஸ்.வீரசேகர, முல்லைத்தீவு மாவட்ட கடற்படை அதிகாரி, படை அதிகாரி, விமானப்படை அதிகாரி, கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலர் கிராம அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.
(ம-19)

## கடற்படையினரால் பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ. 14
கடற்படையினரால் யாழ்ப்பாணத்தில் உள்ள இளைஞர் குழுவுக்கு உயிர்காப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.
காரைநகரில் அமைந்துள்ள எலார கடற்படை முகாமில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 16 இளைஞர்கள் பயிற்சிகளைப் பெற்றுள்ளனர்.
உயிர்காப்புப் பயிற்சியில் கலந்துகொண்டு பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ம-27)

## எக்ஸ்பிரஸ் பேர்ளை அகற்ற சிறப்புக்கப்பல் இலங்கைக்கு

கொழும்பு, டிசெ. 14
கடலில் மூழ்கிய எக்ஸ்பிரஸ் பேர்ள் சரக்குக் கப்பலை அகற்ற சிறப்புக் கப்பல் இந்த வார இறுதியில் இலங்கை கடற்பரப்புக்குள் பிரவேசிக்கும் என கடல் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் தர்ஷனி லஹந்தபுர தெரிவித்தார்.
குறித்த கப்பல் சீனாவுக்குச் சொந்தமானது.
அது எதிர்வரும் 19ஆம் திகதி இலங்கைக்குள் வரும்என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## இளைஞனின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 14
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது. தூக்கிட்ட நிலையிலிருந்தே மேற்படி சடலம் மீட்கப்பட்டது. 20 வயதுடைய இளைஞனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
(ம-125)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்கள தொழில் நிலையத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி வனஜா லோகதாஸ்** அவர்களின் பாசமிகு தந்தையார்.
**அமரர் முருகேசு சின்னத்தம்பி** அவர்கள் கடந்த (11.12.2021) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
**நலன்புரிக்கழகம்**
**மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்.**
(CR 5768) 1-6


## முதியோர் இல்லத்தில் இணைந்த ஜோடி

முதியோர் இல்லத்தில் தஞ்சமடைந்திருந்த இரு முதியவர்கள் திருமண பந்தத்தில் இணைந்துள்ளனர்.
நாரம்மல சடலங்காவில் உள்ள வெல்கம் வில்லேஜ் என்ற இல்லத்தில் தங்கியிருந்த லியோனி பெர்னாண்டோ (வயது -62) மற்றும் சிறில் குணவர்தன (வயது -79) ஆகியோரே திருமண பந்தத்தில் இணைந்துள்ளனர்.
சிறில் குணவர்தன இலங்கை போக்குவரத்துச் சபையின் முன்னாள் ஊழியர். லியோனி 9 மாதங்களான குழந்தையாக இருந்தபோது பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டவர். அவர் கைவினைப்பொருள்கள் தயாரிப்பதில் சிறந்து விளங்கினார் மற்றும் திறமையான பாடகி. முதியோர் இல்லத்தில் காதல் கொண்ட இருவரும், வத்தளையிலுள்ள லியோனியின் உறவினர் வீட்டில் திருமணத்தில் இணைந்தனர். இருவரும் முதியோர் இல்லத்திலேயே தொடர்ந்து வசிப்பர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-4)




## பராமரிப்பாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் தங்கிநின்று வயோதிபப் பெண்ணைப் பராமரிக்க அனுபவம் மிக்க பராமரிப்பாளர் தேவை.
**உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.**
**அனுபவத்தைப்பொறுத்து சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**
தொடர்புகளுக்கு
**071 411 5000**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி கந்தையா

### (ஓய்வுபெற்ற சிறைச்சாலை ஓவசீயர் - யாழ்ப்பாணம்)



மலர்வு 18.04.1932 உதிர்வு 11.12.2021

கைதடி கிழக்கை பிறப்பிடமாகவும் கைதடி தெற்கை வசிப் பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தையா கடந்த 11.12.2021 அன்று இறைபத மெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னத்தங்கத்தின் புதல்வனும், வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளையின் மருமகனும், நாகேஸ்வரியம்மாவின் பாசமிகு கணவரும், அருந்ததி (ஜேர்மனி), அன்பழகி (சுவிஸ்), அகிலா (சுவிஸ்), அமுதா (பிரான்ஸ்), அகிலன் (அமெரிக்கா), அஞ்சலா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காசிப்பிள்ளை (ஜேர்மனி), சுபாஷ்கரன் (சுவிஸ்), ரமணிதரன் (சுவிஸ்), இரமேஷ் (பிரான்ஸ்), குகேதினி (அமெரிக்கா), சசிகுமார் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சக்தீபன், அபிரா, சதீபன், ஜஸ்வர்யா, அச்சுதா, சஞ்ஜீவன், ரஜுஜன், தனோஜன், தகானா, ஜஷ்வந்தி, லவதீசன், விஷ்ணுசெல்லத், அபிராமி, அஷ்வினி, சித்தாத் ஆகியோரின் பாசமிகு பேரனும் வீரத், ஜானு, ரியோ ஆகியோரின் பாசமிகு பூட்டனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், செல்லம்மா, வள்ளிப்பிள்ளை, செல்லத்துரை மற்றும் சண்முகரத்தினம் ஆகியோரின் மூத்தசகோதரனும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், விக்னேஸ்வரன் (சுவிஸ்), தட்ஷணகைலாயபதி, கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற பொன்னம்பலம், யோகராணி (சுவிஸ்), இராஜினிதேவி, சிவபாக்கியம், மகேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும்,காலஞ்சென்ற வீரசிங்கத்தின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் இன்று (14.12.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல்10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கைதடி ஊற்றல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை அறியத்தரு கிறோம்.

கைதடி தெற்கு,
கைதடி.

(cr.36720) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்
077 357 0774



இந்திய நாடாளுமன்ற வளாகத்துக்குள் கடந்த 2001 ஆம் ஆண்டு டிசெம்பர் 13ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தாக்குதல் நினைவு தினத்தையொட்டி நாடாளுமன்ற வளாகத்தில் எம்.பிக்கள் அஞ்சலி செலுத்தினர். (ச)

## 'மிஸ் யுனிவர்ஸ்' பட்டம் வென்ற இந்தியப் பெண்

புதுடில்லி, டிசெ.14

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த 21 வயதான இளம்பெண் ஹர்னாஸ் கவுர் சாந்து 'மிஸ் யுனிவர்ஸ்' பட்டத்தை வென்றுள்ளார். இஸ்ரேலின் சுற்றுலாத்தல மான எய்லட் நகரில் பிரபஞ்ச அழகிக்கான போட்டி நடை பெற்றது. இதில், பல்வேறு நாடு களைச் சேர்ந்த சுமார் 80 அழகிகள் 'மிஸ் யுனிவர்ஸ்' பட்டத்துக்காகப் பங்கேற்றனர். இந்த நிலையில், இந்தியா சார்பில் பங்கேற்ற இளம்பெண் ஹர்னாஸ் கவுர் பிரபஞ்ச அழகியாக தேர்வு செய்யப்பட்டார். இந்தியா சார்பில் லாரா தத்தா 2000ஆம் ஆண்டில் 'மிஸ் யுனிவர்ஸ் ' பட்டத்தை வென்றிருந்தார். அதன்பிறகு 20 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியப் பெண் பிரபஞ்ச அழகியாக தேர்வு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** இழுபறியாக நின்ற விடயங்கள் இன்று நல்ல முடிவுக்கு வரும். வெளியூர்ப் பயணங்கள் செல்ல நேரிடலாம். எதிர்பார்த்த பணம் வரும். சற்றுக் கூடுதலாக உழைத்தால் அற்புதப் பயன் உண்டு.

**இடபம்:** கடன்களைக் குறைப்பீர்கள். உற்சாகமாகப் பணி புரிவீர்கள். பணியிடத்தில் உங்களுக்கு இருந்த மறைமுக எதிர்ப்புக்கள் நீங்கும். குழப்பங்கள் அனைத்தும் தீரும்.

**மிதுனம்:** நினைத்ததைச் செய்து முடிப்பதில் உறுதியாக இருப்பீர்கள். இழுபறியாக இருந்த பிரச்சினைகள் இன்று சாதகமாக முடியும். சாதகமான பயன்களைப் பெறுவீர்கள்.

**கடகம்:** மனதில் இருந்த குழப்பம் குடும்பப் பிரச்சினைகள் குறையும்.மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். நண்பர்கள் உதவி செய்வார்கள். இழுபறியாக நின்ற விடயம் ஒன்று நல்ல முடிவுக்கு வரும்.

**சிம்மம்:** வெளியூர் பயணங்கள் நன்மை தரும். கூடுதலாக உழைப்பீர்கள். கடன் பிரச்சினை குறையும். மனதில் உற்சாகம் பொங்கும் நாள். வியாபாரிகளுக்கும், பணியாளர்களுக்கும் அற்புதமான நாள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** விடா முயற்சியுடன் செயல் ஒன்றில் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். மனதில் இருந்து வந்த கவலை ஒன்று நீங்கும். கல்வி தொடர்பான பிரச்சினைகள் குறையும்.

**துலாம்:** முயற்சியில் வெற்றி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை கூடும். துணிச்சலாக எதிலும் ஈடுபட்டு நீங்கள் எண்ணியதைச் செய்து முடிப்பீர்கள். தொழில் விரிவாக்கம் செய்யும் முயற்சியில் இன்று ஈடுபடுவீர்கள்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து தேவையான பண உதவியை பெறுவீர்கள். குடும்பத்தில் சுபவிடயம் ஒன்று நடைபெறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். உங்களின் வெற்றியை கொண்டாடுவீர்கள்.

**தனுசு:** விருப்பப்பட்ட விடயம் ஒன்றை இன்று செய்து முடிப்பீர்கள். செலவுகளைக் குறைக்கத் திட்டமிடுவீர்கள். மனதில் இருந்த படபடப்பு நீங்கும். பணியிடத்தில் எதிர்பாராத நல்ல திருப்பம் ஒன்று ஏற்படும்.

**மகரம்:** குழந்தைகளின் முன்னேற்றத்தால் உங்களுக்கு சந்தோஷம் ஏற்படும். பணியாளர்களுக்கு எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். செயல் ஒன்றை செய்து பிறரிடம் பாராட்டுப் பெறுவீர்கள்.

**கும்பம்:** அலுவலகத்தில் கூடுதலாகப் பணியாற்றி நன்மை காண்பீர்கள். இன்று எந்த விடயத்திலும் கவனமாகச் செயற்படுவது நல்லது. புதிய பதவிகள் காரணமாக உங்களுக்கு பொறுப்புக்கள் அதிகரிக்கும்.

**மீனம்:** குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது உங்களுக்கு நன்மை தரும். வாழ்க்கைத்துணையின் வாழ்வில் நல்ல முன்னேற்றம் உண்டாகும்.பேச்சின் இனிமை, சாதுரியம் காரணமாக கூடுதல் பயன் பெறுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜயசுந்தர இடத்துக்கு அமரசேகர

கொழும்பு.டிசெ.14
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவுக்குப் பதிலாக, முன்னாள் பிரதமரின் செயலாளர் எஸ்.அமரசேகர நியமிக்கப்படவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமரசேகர, தென்னாபிரிக்காவின் இலங்கைக்கான தூதுவராக தற்போது பணியாற்றி வருகின்றார்.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவின் மீது கடுமையான அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றனர். இதனையடுத்தே, பி.பீ.ஜயசுந்தர பதவி விலகவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-4)

# இரு வாரங்களில் நாட்டில் பஞ்சம்

### பெரமுன எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு,டிசெ.14**
**இன்னும் இரண்டு வாரங்களில் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு முடிந்து பூச்சியமாகி, நாட்டில் மிகப் பெரிய பஞ்சம் ஏற்படும் என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
அடுத்த சில வாரங்களில் அத்தியாவசிய உணவுப் பொருள்களை விநியோகிக்க முடியாத நிலைமைக்கு அரசு மாறும். இதனை அடுத்து நாட்டுக்குள் கலவரமான நிலைமை ஏற்படும்.

நிதியமைச்சர் ஏழாம் வகுப்புவரை தேர்ச்சி பெற்றுள்ளதால், அவரை ஏழு மூளை கொண்டவர் என்று கூறியிருக்கலாம். ஆனால், நாட்டைக் கரை சேர்க்க அது போதுமானதல்ல.

20 ஆவது திருத்தச் சட்டத்துக்குப் பின்னர், பிரதமர் தலைமையிலான அமைச்சரவையில் உள்ள அனைத்து அமைச்சர்களும் ஜனாதிபதியின் அடிமைகளாக மாறியுள்ளனர். தனி நபர் ஒருவர் நாட்டை ஆட்சி செய்யவே 20 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது - என்றார் . (ஒ-4)

## எந்த ஒப்பந்தமானாலும் வெளிப்படை அவசியம்

### கரு ஜயசூரிய வலியுறுத்து

கொழும்பு.டிசெ.14
இலங்கை அரசின் பெறுமதியான மற்றும் முக்கியமான சொத்துக்களை வேறு தரப்பினருக்கு விற்பதற்கு அல்லது மாற்றுவதற்கு கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்களை பரிசீலிப்பதற்காக, முதலில் அது நாடாளுமன்றுக்கும், பொதுமக்களுக்கும் வெளிப்படுத்தப்படவேண்டும் என்று நீதியான சமுதாயத்துக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

கெலவரப்பிட்டிய அனல் மின் நிலையம் உட்பட இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான பல நிறுவனங்களை வெளிநாட்டு நிறுவனத்துக்கு விற்பனை செய்ததாகக் கூறப்படும் விடயம் தொடர்பில் வெளிவந்துள்ள தகவல்கள் பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இயற்கைக்கு மாறான ஒப்பந்தங்களை ஜனநாயக ஆட்சிகளில் கேள்விப்பட்டதே இல்லை.

எனவே அரசு காலதாமதமின்றி உண்மைகளை நாட்டுக்கும், மக்களுக்கும் வெளிப்படையாக வெளிப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ஒ-4)

## இலங்கையில் நீதிபதிகளுக்கு தொடர்ந்தும் வெற்றிடம்

### நீதி அமைச்சர் தெரிவிப்பு



எந்தவொரு நாடும் முன்னேற வேண்டுமானால், சட்டத்தின் ஆட்சி மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகிய இரண்டு விடயங்களும் நிறைவேற்றப்பட வேண்டும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,நீதிமன்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறுவர் துஷ்பிரயோக வழக்கு விசாரணைகளிலும் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.

மிதமான பொருளாதார நிலைமை கொண்ட நாடுகளில் ஒரு மில்லியன் மக்கள் தொகைக்கு 60 நீதிபதிகள் உள்ளனர். இந்தியாவில் ஒரு மில்லியன் மக்களுக்கு 22 நீதிபதிகள் உள்ளனர்.

இலங்கையில் ஒரு மில்லியனுக்கு 15 நீதிபதிகள் மாத்திரமே உள்ளனர். இது பெரும் பிரச்சினை. இந்தப் பிரச்சினையை உணர்ந்து நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 11 இல் இருந்து 17 ஆக உயர்த்தப்பட்டுள்ளது- என்றார். (ஒ-4)

## மக்களுக்கான சிறந்த சேவை அனிச்சியன்குளம் முதலிடம்

முல்லைத்தீவு, டிசெ.14
முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களுக்குச் சிறந்த சேவை வழங்கும் கிராம அலுவலர் பிரிவாக அனிச்சியன்குளம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

கிராம அலுவலர்களின் அலுவலக முகாமைத்துவப் போட்டி மதிப்பீடுகள் மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாக மேற்கொள்ளப்பட்டன.

அதனடிப்படையில் 6 பிரதேச செயலர் பிரிவுகளையும் உள்ளடக்கிய மதிப்பீடுகள் வெளியிடப்பட்டுள்ளன.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனிச்சியன்குளம் கிராம அலுவலர் பிரிவு முதலாவது இடத்தையும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முத்துஐயன்கட்டுக்குளம் கிராம அலுவலர் பிரிவு இரண்டாவது இடத்தையும், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கள்ளப்பாடு வடக்கு கிராம அலுவலர் பிரிவு மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது.

இதனைவிட மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கரும்புள்ளியான் கிராம அலுவலர் பிரிவு நான்காவது இடத்தையும், கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முள்ளியவளை வடக்கு கிராம அலுவலர் பிரிவு ஐந்தாவது இடத்தையும் பெற்றுள்ளன. (ஒ-4,19)

## அரசியலுக்காக மதத்துரோகமா?

### பேராயர் போர்க்கொடி

கொழும்பு,டிசெ.14
அரசியலுக்கு அடிபணிந்து, மதக் கோட்பாடுகளை தூக்கி எறிந்து மதத்தலைவர்கள் துரோகம் செய்யக்கூடாது என்று கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தினார். பொல்லத்த சேக்ரட் ஹார்ட் தேவாலய பெருவிழாவில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மதத் தலைவர்கள் அரசியல் கட்சிகளின் தலைவர்களாக இருக்க முடியாது. அவர்கள் அரசியலில் இருந்து முற்றாக விலகி இருக்க வேண்டும். இலாபத்துக்காக அரசியல் கட்சித் தலைவர்களிடம் தலைவணங்கக்கூடாது.

அரசியல் தலைவர்கள் தங்கள் அரசியல் அதிகாரத்தை வலுப்படுத்த மதத் தலைவர்களைப் பயன்படுத்தினால், அது அந்த மதத்தை அவமதிக்கும் செயலாகும்.

புத்த பெருமானின் மத போதனைகளின்படி இந்த நாட்டில் தர்மத்தை நிலைநிறுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-4)

## அரச கூட்டணி பிளவுற வாய்ப்பு

### மைத்திரி எதிர்வுகூறல்

கொழும்பு,டிசெ.14
அரசுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட கூட்டணி பிளவுறும் வாய்ப்பு உள்ளது என்று முன்னாள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கூட்டணியை முன்னெடுத்துச் செல்வதா? இல்லையா? என்பது அதனை ஏற்படுத்தியவர்களின் பொறுப்பாக உள்ளது. அதனைச் சரிவர நிறைவேற்றாத பட்சத்தில் கூட்டணி பிளவுபடுவதற்கான வாய்ப்புள்ளது.

தகவல் அறியும் சட்டத்தைச் செயலிழக்கச் செய்ய அரசு முயற்சிக்கிறது. இது கவலையளிக்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-4)

## தலைமன்னாரை இந்தியாவுக்குத் தாரைவார்க்க அனுமதிக்க முடியாது



கொழும்பு.டிசெ.14
தலைமன்னாரில் காற்றாலை மின் திட்டத்தை, இந்திய கூட்டு நிறுவனமான அதானி குழுமத்துக்கு வழங்குவதற்கு எதிராக ஜே.வி.பி களத்தில் இறங்கியுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்நலிந்தஜயதிஸ்ஸதெரிவிக்கையில்,
சர்வதேச தரமதிப்பீட்டு நிறுவனங்களால் நாட்டைக் குறைத்ததன் காரணமாக, அரசால் கடன்களைப் பெற முடியவில்லை. சீனா மற்றும் இந்தியாவிடம் மட்டுமே கடன் வாங்க முடியும். ஆனால் இந்த முதலீட்டாளர்கள் இலங்கையின் மீது கொண்டுள்ள காதலுக்காக இலங்கைக்கு வருவதில்லை. புவிசார் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் தங்களுடைய இருப்பை நிலைநிறுத்துவதற்கு நீண்டகாலத் திட்டத்தைக் கொண்டுள்ளனர்.

அதானி குழுமத்துக்கு தலைமன்னாரில் நிலம் வழங்குவது அண்மைய நடவடிக்கை. இந்த ஒப்பந்தங்களில் சில அரசியல்வாதிகள் இலாபம் பெறுகின்றனர். இதை நாம் நிறுத்த வேண்டும் - என்றார். (ஒ-4)

## சுகாதார அறிக்கை படிவம் இணையவழியில்

கொழும்பு, டிசெ.14
இலங்கைக்கு வருகை தரும் பயணிகள், இலங்கைக்கு வருவதற்கு முன் கட்டாய இணையவழி சுகாதார அறிக்கைப் படிவத்தை நிரப்ப வேண்டும் என்று சிவில் விமானப் போக்குவரத்து ஆணையத்தின் தலைவர் உபுல் தர்மதாச அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கான இந்தப் புதிய விதிமுறைகள் 2022 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்படவுள்ளது. (ஒ-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நெகிழ்ந்த நினைவஞ்சலிகள்

18 ஆம் ஆண்டு 12 ஆம் ஆண்டு

தாயின் மடியில் 09.10.1971



தாயின் மடியில் 15.02.1975



தரணியின் தாளில் 04.12.2003

தரணியின் தாளில் 12.11.2009

**அமரர் தம்பிராஜா சுதர்சன் (சுதா)**
(முன்னாள் ஆசிரியர் - யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்)
திதி:- ஏகாதசி (14.12.2021)

**அமரர் தம்பிராஜா சயந்தன்**
(முன்னாள் உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை)
திதி:- ஏகாதசி (01.11.2021)

அன்பு பண்பு பாசம் கொண்டு அனைவரையும் வழி நடத்திய
பண்பாளர் நீங்கள் வாழ்ந்தது போதுமென்று
பெற்றோரையும் உடன் பிறந்தோரையும்
உற்றோரையும் தவிக்கவிட்டு விண்ணுலகம் புகுந்ததேனோ
காலங்கள் கடந்தாலும் உயிர் உள்ள வரைக்கும்
எம் இதயத்தில் குடியிருக்கும் தெய்வங்கள் நீங்கள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்

**முதலாம் வட்டாரம், நெடுந்தீவு.** உங்கள் பிரிவால் நித்தம் துயருறும் : **குடும்பத்தினர்.**

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு
## இரண்டாம் பகிரங்கஏலம்- 2022

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2022 இலிருந்து 31.12.2022 வரையான காலப்பகு திக்கு நடாத்து வதற்காக குத்தகைக்கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

பகிரங்க ஏலப்பத்திரம் வழங்கும் காலம் :- 14.12.2021 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 20.12.2021. முற்பகல் 11.00 மணிவரை (அலுவலக நாட்களில் மட்டும்)

பகிரங்கஏலத் திகதி :- 2021.12.20 மு.ப. 11.30 மணிக்கு.

| இல | குத்தகை வகை | மீளளிக்க முடியாத ஏலப்படிவ கட்டணம் (NBT,VAT நீங்கலாக) | மீளளிக்க கூடிய ஏலவைப்புப்பணம் (NBT,VAT நீங்கலாக) | தற்போது கேள்வி கோரிய தொகை (NBT,VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | புதுக்குடியிருப்பு உப அலுவலகம். | | | |
| 1 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 45,000.00 | 4,410,450.00 |
| 2 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கோழிறைச்சிக்கடை | 1,000.00 | 20,000.00 | 1,925,442.09 |
| 3 | உடையார்கட்டு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 2,500.00 | 93,822.30 |
| 4 | மந்துவில் பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | 39,293.10 |
| 5 | மந்துவில் கோழியிறைச்சிக்கடை (மட்டுப்படுத்தப்பட்டுள்ளது) | 1,000.00 | 2,000.00 | 20,929.59 |
| 6 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடைஇல-02) | 1,000.00 | 2,000.00 | 25,661.53 |
| | ஒட்டுசுட்டான் உப அலுவலகம். | | | |
| 1 | கற்சிலைமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 2,500.00 | 53,326.35 |
| 2 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 3,000.00 | 244,579.50 |
| 3 | கற்சிலைமடு கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 2,500.00 | 90,394.38 |
| 4 | ஒட்டுசுட்டான் கருவாட்டுக்கடை(இல-01) | 1,000.00 | 1,000.00 | 2,245.32 |
| 5 | ஒட்டுசுட்டான் கருவாட்டுக்கடை(இல-02) | 1,000.00 | 1,000.00 | 2,245.32 |
| | ஒலுமடு உப அலுவலகம். | | | |
| 1 | மாங்குளம் கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | 214,989.39 |
| 2 | மாங்குளம் பொதுச்சந்தை | 1,000.00 | 3,500.00 | 257,578.38 |
| 3 | மாங்குளம் மாட்டிறைச்சிகடை | 1,000.00 | 2,000.00 | 17,253.00 |
| 4 | மாங்குளம் கருவாட்டுக்கடை | 1,000.00 | 1,000.00 | 2,245.32 |

**நிபந்தனைகள்**

01. முதலாம் சித்திகர கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 2021.12.22 ஆம் திகதிக்கு பி.ப 2.00 மணிக்கு முன்னர் குத்தகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். தவறின் அடுத்த தர சித்திதாரர் களுக்கு தொலைபேசி மூலம் தகவல் வழங்கப்படும் அவர்கள் பெற்றுக் கொள்வதாயின் சம்மதக் கடித்தினை 2021.12.22 பிற் பகல் 3.30 மணிக்கு முன்பு சமர்பிக்கப்பட வேண்டும் அவர்கள் 1/3 பகுதியை 2021.12.23 ஆம் திகதிக்கு பி.ப 2.00 மணிக்கு முன்னர் குத்தகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும்.

02. கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் வடக்கு மாகாண எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி, தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

03. ஏலத்திற்கு விண்ணப்பதாரர் மட்டும் சுகாதார விதிமுறைகளுக்கு அமைய பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள்.

04. ஏனைய நிபந்தனைகள் உதயன் நாளிதளின் 2021.10.18, மற்றும் 2021.12.03 ஆம் திகதிய பத்திரிகையில் உள்ள எமது சபை கோள்வி கோரல் நிபந்தனைகளே அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளவும்.

**அ.தவகுமாரன்,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை,**
**புதுக்குடியிருப்பு.**
2021.12.13.

**தொலைபேசி இல:-** 0212290847 / 0212291023 email-pkipsmullai@gmail.com.

(cs.36722)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட தொழில் நிலையத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி. லோகதாஸ் வனஜா அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் முருகேசு சின்னத்தம்பி**

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்கள உத்தியோகத்தர்கள்**
**யாழ். மாவட்டம்** (CS 41605) (3/6)

## 28 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 . 09 . 1929



ஒடுக்கம் 27 . 11 . 1993

**சின்னத்தம்பி சந்திரசேகரம்**
ஓய்வுபெற்ற P.W.D ஓவசியர்.
R.M.C (R.D.A)
**திதி:** கார்த்திகைமாத பூர்வபக்க ஏகாதசி

இல்லறத்தை நல்லறமாய் இனிதே வாழ்ந்தீரே
இல்லார்க்கு இனிதாய் பல உதவிகள் புரிந்தீரே
விருப்புடனே விருந்தோம்பல்பல செய்தீரே
சிறப்புடன் நாம் வாழ வழியமைத்து கொடுத்தீரே
சிந்தையிலே உமைநினைந்து சிறப்பாக வாழ்கின்றோம்.

**இன்பகம்**
**இணுவில் மேற்கு,**
**இணுவில்.** **குடும்பத்தினர்**

(cs.41598) (2/6)

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

அவோன் தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனத்தின் ஊடாக யாழ் மாவட்டத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர் களாக கடமைபுரிவதற்கு ஆண் உத்தியோஸ்தர்கள் தேவை. பணிபுரிவதற்கு ஆர்வமுள்ளவர்கள் எமது நிறுவனத்தால் நடத்தப்படும் நேர்முகத்தேர்வில் பங்கு கொண்டு உங்கள் வேலையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

1. நேர்முகத்தேர்விற்கு சமுகமளிக்கும் சகலரும் கிராம அலுவலரின் நற்சான்று பத்திரம் (மூலப்பிரதி)
2. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (மூலப்பிரதி)
3. கல்வித் தகைமையை உறுதிப்படுத்தும் பத்திரம்
4. தேசிய அடையாள அட்டை (நகல் பிரதி)
5. பாடசாலை விடுகைப் பத்திரம்.
6. கடவுச்சீட்டு அளவு புகைப்படம் இரண்டு

• **தகைமைகள்:**
I. உயரம் - 5'4"
II. மார்பு - 32"

• 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் சமுகமளிக்கவும்.

**நேர்முகத்தேர்வு நடைபெறும் முகவரி**
**இடம் :-** Avon International Holdings (Pvt) Ltd
YMCA 2ம் மாடி.
**இல. 107A, 2/1 கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**(யாழ் மாவட்ட செயலகத்திற்கு அருகில்)**

**காலம் :- 14 ம் திகதி முதல் 27ம் திகதி வரை**
**நேரம் :-** 09.00am - 4.30pm வரை நேரில் சமுகம் தரவும்.

தொடர்புகளுக்கு :- 0774355658, 0212264843
(முகவரியை தெளிவூட்டலுக்கு மட்டும்)

(cs.41604) (2/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி பிரதேச சபை - கொடிகாமம்

## பொது அறிவித்தல் - 2022

சாவகச்சேரி பிரதேசசபையின் எல்லைக்குள் வசிக்கும் மக்கள்/தொழில் நிறுவன உரிமையாளர்கள் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்நடைமுறைகளை பின்பற்றத்தவறுவோர் மீது 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**01. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2022**

சபை எல்லைக்குள் சகல வியாபார தொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ளுபவர்கள் 2022 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரத்தை 31.03.2022 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**02. சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் - 2022**

1533/16 ஆம் இலக்க 25.01.2008 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் விதந்துரைக்கப்பட்ட தொழில்களை அல்லது வியாபாரத்தை மேற்கொள்பவர்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது ஏறகனவே சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றவர்கள் உரிமம் காலாவதியாகும் தினத்திற்கு மூன்று மாதத்திற்கு முன்னர் விண்ணப்பித்து புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

**03. ஆதன வரி செலுத்துதல்**

எமது சபையின் உப அலுவலகங்கள் நாவற்குழி, கைதடி ஆகிய இடங்களில் இந்த சேவை வழங்கப்பட்டு வருகிறது. அப்பகுதியில் வசிப்பவர்கள் அந்தந்த உப அலுவலங்களுக்கு சென்று 31.03.2022 ஆம் திகதிக்கு முன்னர் ஆதனவரியை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் 31.03.2022 க்கு முன்வரி செலுத்த தவறின் 10% தண்டமும் வரியும் அறவிடப்படும்

**04. மரக்கறி, மீன் இறைச்சி விற்பனை தடை செய்தல்**

சபையின் எல்லைக்குள் உள்ள சந்தைகளில் இருந்து 500m சுற்றுவட்டாரத்தினுள் வர்த்தக நிலையங்கள் பாதையோரங்கள் என்பவற்றில் மரக்கறி. மீன். கோழியிறைச்சி ஆட்டிறைச்சி என்பன விற்பது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

**05. வீடமைப்பு நாடு நகர அபிவிருத்தி கட்டளைச்சட்டம் பிரிவு 268 ன் பிரகாரம் அறிவித்தல்.**

- சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் புதிய கட்டுமானங்கள் அல்லது திருத்தங்கள் குழாய் கிணறு அமைத்தல் மற்றும் அனைத்து கொங்றீற் வேலைகளுக்கும் 2235/54 ஆம் இலக்க 2021.07.08 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையின் பகுதி I தொகுதி (I) இன் பிரகாரம் பிரதேசசபையின் அனுமதி பெறப்படல் வேண்டும். அனுமதியின்றி அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் எதுவாகினும் கட்டட உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அல்லது நட்டஈடு இன்றி கட்டடமானது அகற்றப்படும்.
- கட்டட விண்ணப்ப அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து 01 வருட காலப்பகுதியினுள் கட்டட நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்து உரிய கட்டணத்தினை செலுத்தி அமைவுச்சான்றிதழினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். 01 வருட காலப்பகுதியினுள் வேலைகள் பூர்த்தி செய்யப்படாதவிடத்து உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியானது புதுப்பிக்கப்படல் வேண்டும்.

**06. துவிச்சக்கர வண்டி உரிமம், மிருகவரி உரிமம் பெற்றுக்கொள்ளல்**

2022 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கர வண்டி, மிருக வரி உரிமங்களை 31.03.2022 ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**07. விளம்பரங்களை காட்சிப்படுத்தல்**

சபையின நிர்வாக எல்லைகுள் வீதிகளின் இருமருங்காகவும் வீதிக்கு மேலாகவும் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் புதிதாக காட்சிப்படுத்தப்படவுள்ள விளம்பரங்களிற்கு பிரதேசசபையில் உரிய கட்டணம் செலுத்தி முன் அனுமதியினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள விளம்பர பலகைகளிற்கு 31.03.2022 ஆம் திகதிக்கு முன்பாக உரிய கட்டணமானது செலுத்தப்பட்டு அனுமதியானது புதுப்பிக்கப்படல் வேண்டும். முறையான அனுமதியினைப் பெற்றுக்கொள்ளாத விளம்பரங்கள் யாவும் எவ்வித முன்னறிவித்தலுமின்றி அகற்றப்படும்.

**08. கழிவகற்றல் சேவை**

தங்கள் வீட்டில் அகற்ற முடியாதுள்ள தரம்பிரிக்கப்பட்ட கழிவுகளை பிரதேச சபையில் கட்டணம் செலுத்தினால் சபையால் அக்கழிவுகளை அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும். மேலும் கழிவுப்பொருட்களில் பிளாஸ்ரிக். கண்ணாடி. உக்காத கழிவுகள். உக்கும் கழிவுகள் போன்றவற்றினை வேறுபடுத்தி வைப்பதனூடாக சபையின் உதவியுடன் அகற்றிக்கொள்ள முடியும்.

**09. நீர் வழங்கல் சேவை**

பொதுமக்கள் தங்கள் வீட்டின் விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் பிரதேசசபையில் கட்டணம் செலுத்துவதன் மூலம் குடிநீரை பெற்றுக்கொள்ளமுடியும்.

**10. கனரக வாகன சேவைகள்.**

கலிபவுசர். றோலர் போன்ற கனரக வாகன சேவைகளை பெறுவதற்கு தலைமைக்காரியாலயத்தில் குறித்த சேவைக்கான கட்டணங்களை செலுத்தி வாகன சேவைகளைப்பெற்றுக்கொள்ளலாம்.

**11. பொதுசுகாதாரம் பேணல்.**

- சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாரத்திற்கு இடையூறாகவுள்ள காணி உரிமையாளர்கள் / பராமரிப்பாளர்கள் பற்றைகளை துப்பரவு செய்து பொதுசுகாதாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். டெங்கு பரவக்கூடிய கொள்கலன்கள் எதுவும் காணியில் இல்லாதொழிக்க வேண்டும். தவறுவோர் மீது குற்றப்பணம் அறவிடப்படும்.
- உணவு கையாளும் நிலைய பணியாளர்கள் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.
- 20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலீத்தின் பாவனையானது 2034/33 ஆம் இலக்க 2017.09.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையின் பிரகாரம் தடைசெய்யப்பட்டுள்ளது.

**12. சந்தை வியாபாரம் தொடர்பானது.**

சந்தைகளில் உற்பத்தி பொருள்களுக்காக எதுவித கழிவுகளும் மேற்கொள்ளப்படலாகாது. குத்தகை வரியானது 4% இற்கு மேற்படலாகாது.

சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றை அனுசரித்து செயற்படுமாறு சந்தை குத்தகையாளர்கள் கோரப்படுகின்றனர்.

சந்தை சுற்றாடல் பகுதியில் துவிச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்கள். வாகனங்கள் நிறுத்துதல் தடை செய்யப்பட்டுள்ளது. அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் தரித்து விடப்படல் வேண்டும்.

**13. பொது இடங்களிலும் மற்றும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளைப்போடுதல் தடை செய்யப்பட்டுள்ளது.**

சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும், வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப்பொருட்களை போடுதல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. மீறிச்செயற்படின் சுற்றாடல் பொலிஸ் மூலம் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு மேலதிக நடவடிக்கை மேற்றகொள்ளப்படும்.

**14. கட்டாக்காலி விலங்குகள் தொடர்பானது.**

சபை எல்லைக்குள், வீதிகளில் கட்டாக்காலியாக திரியும் விலங்குகள் பிரதேசசபையால் பிடிக்கப்பட்டு உரிமை கோரும் பட்சத்தில் தண்டம் மற்றும் பராமரிப்புச்செலவுடன் மீள வழங்கப்படுவதுடன் உரிமை கோராத பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

**15. படவரைஞர்களை பதிவு செய்தல்**

2022 ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்யவிரும்புவோரும் எமது சபையில் ஏற்கனவே பதிவு செய்துள்ளவர்களும் 2022.01.31 ஆம் திகதிக்கு முன்பாக தமது பதிவுகளை மேற்கொள்ளவோ அல்லது புதுப்பித்துக்கொள்ளவோ முடியும். மேலதிக விபரங்களிற்கு தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**16. விசேட அறிவித்தல்**

சபை எல்லைக்குள் வீதியோரங்களில் பாதைக்கு இடையூறாக அழகுக்காக பூக்கன்றுகள் வளர்க்கப்படுதல், வீதியோரங்களில் பாதைக்கு இடையூறாக கொங்றீற்றிலான கட்டுமானம் கட்டுதல் மற்றும் நடைபாதை வியாபாரம் என்பன பொதுமக்களுக்கு இடையூறாக அமைக்கப்படுமிடத்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் தொடர்புடைய தொழில்புரிபவர்கள் மற்றும் பொதுமக்களின் கவனமானது ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தல்களை பின்பற்ற தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

தவிசாளர்
**சாவகச்சேரி பிரதேச சபை**
**கொடிகாமம்.**

13.12.2021 (CR 36717) (3/6)

---

# மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 10 * 02 * 1963 | 11 * 12 * 2021 |

## திரு. முருகேசு மயில்வாகனம் (ராஜன்)

யாழ். வரணியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Herne ஐ வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு மயில்வாகனம் அவர்கள் 11-12-2021 சனிக்கிழமை அன்று ஜேர்மனியில் இறைவனடி சேர்ந்தார். அன்னார், காலஞ்சென்றவர்களான முருகேசு - பரமேஸ்வரி(வரணி) தம்பதிகளின் பாசமிகு புதல்வரும், தங்கராசா, காலஞ்சென்ற யோகேஸ்வரி(மாதகல்) தம்பதிகளின் பாசமிகு மருமகனும், சியாமளா அவர்களின் அன்புக் கணவரும், சதுஷன், சயந்தன், மிதுஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவஞானதேவி(கனடா), நவரத்தினம் (கனடா), காலஞ்சென்ற செல்வரத்தினம், நிர்மலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவராசா, பத்மாவதி, மணிமேகலை, ஆறுமுகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், இராசரத்தினம் அவர்களின் அன்பு மருமகனும், சிவகுமார்(கனடா), உதயகுமார்(கனடா), ராஜ்குமார்(கனடா), சுகந்தகுமார்(கனடா), நிராதரன்(கனடா), நிவிதா(அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமாவும், சப்தா (கனடா), மீரா(கனடா), மிது(கனடா) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், காசிநாதர், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம், வேதாரணியம், சிதம்பரநாதர், ஆகியோரின் பெறாமகனும், கரணிகா, கரிஷ், கைலாஷ், கௌசிகா, கௌதம், கௌசனா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், கோகிலா(லண்டன்), சர்மிளா (ஜேர்மனி), கேசவன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு அத்தானும், கனீந்திரன், திரோனன், தர்சிகா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

சியாமளா (மனைவி) : +492323146147 சதுஷன் (மகன்) : +4917630418098
தேவி (சகோதரி) : +14162714444 நிர்மலா (சகோதரி) : +94779361883 நவம் (சகோதரன்) : +94774206383

(CR 36715)

---

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 . 01 . 1940 | 11 . 12 . 2021 |

திருமதி

## வேலாயுதபிள்ளை பொன்னம்மா

வசாவிளானைப் பிறப்பிடமாகவும், இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலாயுதபிள்ளை பொன்னம்மா கடந்த 11.12.2021 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதர் - கைராசிப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராசையா - இளையபிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற திரு. வேலாயுதபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் மற்றும் லிங்கேஸ்வரன், கோடீஸ்வரன் (செல்வம்), அமிர்தகௌரி (கௌரி), மகேஸ்வரன் (சந்திரன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சத்தியலட்சுமி, கவிதா, சிவமலர் (கண்ணா), சியாமளா (சியா), தர்மகுலசிங்கம் (பாபு), ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சுதர்சனா, நிதர்சனா, தர்சன், மிளிரன், அதிசன், பிரதீபா, விதுசா, விதுசன், ஆரியன், சாரணி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், இனியாவின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**திரு.வே.லிங்கேஸ்வரன்**
**077 511 2395**

(cs. 41600) (2/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 08 • 03 • 1961



மறைவு 11 • 12 • 2021

## திருமதி பற்குணநாதன் தெய்வகுமாரி (குமாரி)

21 செம்மணி வீதி நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பற்குணநாதன் தெய்வகுமாரி 11.12.2021 சனிக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு மனோன் மணி அவர்களின் மூத்தபுதல்வியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் பாக்கியம் அவர்களின் அன்பு மருமகளும் கணபதிப்பிள்ளை பற்குணநாதன் அவர்களின் அன்பு மனைவியும் சாந்தா (யாழ்ப்பாணம்), சுகிர்தன் (சுகிர் - காணாமலாக்கப்பட்டவர்-2007), நிரோஜினி, நந்தினி (லண்டன்), கோபிகிருஷ்ணா (சுவிஸ்லாந்து), மதன்குமார் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலேந்திரா (ஸ்ரீவிக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ் - யுனிலிவர் டிஸ்ரிவூட்டோர்ஸ் விற்பனைப் பிரதிநிதி - சாவகச்சேரி), ஸ்ரீதரன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் அமரர் தெய்வேந்திரன் (இத்தாலி), அமரர் தர்மினி (யாழ்ப்பாணம்), கஜேந்திரன் (வவுனியா), சுமதினி (யாழ்ப்பாணம்), யோகேந்திரன் (வவுனியா) ஆகியோரின் அன்பு சகோதரியும் அமரர் விஸ்வலிங்கம், சபாரட்ணம் (அனலைதீவு), சின்னத்துரை, தில்லைச்சிவம் (பிரான்ஸ்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் அழகேஸ்வரி, சாராதாம்பிகை, ரவீந்திரநாதன், கணேசநாதன், பாபு (அத்தியடி) பத்மா (பிரான்ஸ்), புவனேஸ்வரி (இத்தாலி), இராசலட்சுமி (வவுனியா), ஹரிகரன் (இந்தியா), தயாளரூபா (வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் அமரர் கனகசிங்கம், புண்ணியசிங்கம், லோகசிங்கம், தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மருமகளும் சிரோன்மணி (கனடா), தவமணி (மைனா-கனடா), அமரர் நவமணி (குஞ்சுகிளி), அமரர் ருக்மணி, ஜெயமணி ஆகியோரின் பெறாமகளும் வளர்மதி, சிந்துமதி, ஜெயசங்க, வஜனிகா, கோகுலன் ஆகியோரின் பெரியதாயாரும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, இந்திராணி (வவுனியா தெற்கிலுப்பைக் குளம்) சண்முகரத்தினம், கமலாம்பிகை (தங்கோடை காரைநகர்) ஆகியோரின் சம்பந்தியும் கெவின், கனியமுதன், சங்கீதன், சரணுகா, கலைக்குமரன், லேக்கா, விதுலன், தனுசிகன், சுபதா, காவியா, துளசி ஆகியோரின் அன்பு மாமியும் டேனுகா (லண்டன்), தக்ஷிகா (லண்டன்), பானுஜா (யாழ்ப்பாணம்) தனுசிகன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.12.2021 வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்**
**குடும்பத்தினர்**

**21, செம்மணி வீதி,**
**நாயன்மார்கட்டு,**
**யாழ்ப்பாணம்.**

-தொடர்புகளுக்கு

| | |
|---|---|
| கோபிகிருஷ்ணா (சுவிஸ்லாந்து) | 0041795587477 |
| நிரோஜினி (நந்தினி லண்டன்) | 00447951729064 |
| மதன்குமார் (அவுஸ்திரேலியா) | 0061409899481 |
| பாலேந்திரா (பாலா -மருமகன்) | 0762999527 |
| சாந்தா (மகள்) | 0778737087, 0772399527 |
| பற்குணநாதன் (கணவர்) | 0775187572 |
| பாபு மைத்துனர் (அத்தியடி) | 0776592066 |

(CS 41606) (3/ 6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ..டாந்த விருது வழங்கல் விழா 2021

..மய்நிகர் விருது வழங்கல் விழாவினூடாக டிசம்பர் 10ம் திகதி 2021 அன்று கௌரவித்தது.

..ும் உள்ள எங்கள் ..றப்பான சாதனைகளை ..பட்டது.

.. ஊக்குவிக்கவும் 71 ..ஸ் லைப். இன்சூரன்ஸ்



காணி சுப்பிரமணியம்
தலைமை நிர்வாக அதிகாரி - அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடெட்
இயக்குனர் - அலியான்ஸ் லைப் இன்சூரன்ஸ் லங்கா லிமிடெட்



ஜெயலால் ஹேவாவசம்
தலைமை நிர்வாக அதிகாரி
அலியான்ஸ் லைப் இன்சூரன்ஸ் லங்கா லிமிடெட்






A. L. கிஹான் பீரிஸ்
வெற்றியாளர்களின்
வெற்றியாளர்
பொது காப்புறுதி

விஷ்வ ரணசிங்க
வெற்றியாளர்களின்
வெற்றியாளர்
ஆயுள் காப்புறுதி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உதவியாளர் தேவை

ஆரோக்கியமான பெண்ணை பார்ப்பதற்கு பெண் உதவியாளர் தேவை.

**077 144 0805**

(cs 41599) (2/6)


# 18 கிராம் ஹெரோய்னுடன் கைதானவருக்கு மறியல்

18 கிராம் ஹெரோய்ன் போதைப் பவுடருடன் சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் நேற்று ஒருவரைக் கைது செய்துள்ளனர். மதுவரி நிலையத்தினருக்கு கிடைத்த தகவலையடுத்து, நவாலிக்கு விரைந்த மதுவரி நிலையத்தினர் 18 கிராம் 670 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப் பவுடருடன் ஒருவரைக் கைதுசெய்தனர். அவர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தின் உதவி மதுவரி ஆணையாளர் க.தர்மசீலன் மதுவரி அத்தியட்சகர் ரி.தங்கராசா ஆகியோரின் வழிகாட்டலில் மதுவரி பொறுப்பதிகாரி ராஜ்மோகன் மற்றும் ரசிகரன் ஆகியோரின் தலைமையில் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டார். (து-9-159)


## University of Jaffna – Sri Lanka
## Faculty of Management Studies and Commerce
## Master of Business Administration
## Intake VI – 2020/2021

The Faculty of Management Studies and Commerce of the University of Jaffna is pleased to announce the commencement of the Master of Business Administration (MBA - Intake VI) - 2020/2021 and invites applications for the admission from qualified candidates. Details of the programme can be obtained from the website of the Faculty of Management Studies and Commerce: http://www.maco.jfn.ac.lk

**ELIGIBILITY REQUIREMENTS**

A candidate seeking admission to an MBA should possess any one or more of the following qualifications and should demonstrate a satisfactory level of English language proficiency:

i. A degree from a recognized University / Higher Education Institution

**OR**

ii. A Postgraduate Diploma from a recognized University or Higher Education Institution/ Professional Institution with a minimum of one year post qualifying managerial/ relevant experience.

**OR**

iii. At least any one of the following professional qualifications with three years managerial/ relevant experience:

- Chartered institute of marketing (CIM) UK
- Associate member of Chartered Institute of Bankers (ACIB) UK
- Associate member of Chartered Institute of Bankers (AIB) Sri Lanka
- Chartered Institute of Management Accountants (CIMA)
- Chartered Institute of Personnel and Development (CIPD)
- Association of Chartered & Certified Accountants (ACCA)
- Chartered Accountants (CA) Sri Lanka
- Certified Management Accountant (CMA) Sri Lanka
- Institute of Engineers (CIE) UK/Sri Lanka
- Institute of Chartered Secretaries and Administrators
- At least a three year Higher National Diploma in Accountancy/ Management/ Marketing obtained from Ceylon Technical College/ Advanced Technical Institute/ Advanced Technological Institute, Sri Lanka, etc.
- Attorney – at – Law

**OR**

iv. Any other academic/professional qualification(s) obtained from a recognized University/ Institute with a minimum of three years of post qualifying experience acceptable to the Board of study and the Senate of the University of Jaffna.

**PROGRAMME STRUCTURE**

Duration - Two years (Four (04) Semesters)
Medium of instruction - English

Application Fees: Rs 2,000

**COURSE FEE**

Total course fee for the MBA programme is LKR Four Hundred Thousand (LKR 400,000.00). This can be paid in two installments as given below:

First Year : Rs 230,000
Second Year : Rs 170,000

**The closing date for application: 10.01.2022.**

**APPLICATION PROCEDURE**

Online application form, procedure and sample paying-in-voucher are available on the website http://www.maco.jfn.ac.lk
Further information could be obtained through 021 221 6394 / 021 222 3610 and the above website.

**Registrar**
**University of Jaffna, Sri Lanka**

(CR 36718) (3/6)



## கண்ணீர் அஞ்சலி

எமது பரிபாலன சபையின் முன்னாள் உபதலைவரும்
நீண்டகால பரிபாலன சபை உறுப்பினருமாகிய

## சின்னத்தம்பி கந்தையா

அவர்களின் மறைவு எமக்கு பேரிழப்பாகவுள்ளது



அன்னாரின் இழப்பால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துகொள்வதோடு அவர்களின்
ஆத்மா சாந்தியடைய
வீரகத்திப்பிள்ளையாரைப்
பிரார்த்திக்கின்றோம்.

**நம்பிக்கைப் பொறுப்பாளர்**
**பரிபாலன சபையினர்,**
**கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில்**
**முதலாய கோயில்கள்.**

(cs 41596) (2/6)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம்
## நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறி - 2021/2022 (அணி - V)

முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தினால் நடாத்தப்படும் நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

- கற்கைநெறிக்கான காலம் - ஒரு வருடம் (வார இறுதி நாட்கள்)
- கற்பிக்கப்படும் மொழி - தமிழ்
- விண்ணப்பிப்பதற்கான தகுதி - க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களிலும் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- கற்கைநெறிக்கான கட்டணம் - ரூபா. 33,250/-

கட்டண விபரம் :

| | |
|---|---|
| பதிவுக்கட்டணம் | - 2,500.00 |
| கல்விக் கட்டணம் | - 25,000.00 |
| பரீட்சைக் கட்டணம் | - 5,000.00 |
| நூலகக் கட்டணம் (திரும்பப் பெறத்தக்கது) | - 750.00 |
| மொத்தம் | - 33,250.00 |

- விண்ணப்ப முடிவுத் திகதி - 31.12.2021
- விண்ணப்பப் படிவத்தினை பெறும் முறை:

விண்ணப்பப்படிவத்தினை http://www.maco.jfn.ac.lk/ என்ற இணையத்தள முகவரியூடாக தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

- விண்ணப்பிக்கும் முறை :

எந்தவொரு மக்கள் வங்கிக்கிளையிலும் (கணக்கிலக்கம் - 050052020001509) விண்ணப்படிவத்திற்கான கட்டணமாக ரூபா 300 ஐ செலுத்தி, தரவிறக்கம் செய்து பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் பற்றுச்சீட்டினை இணைத்து உதவிப் பதிவாளர், முகாமைத்துவக்கற்கைகள் மற்றும் வணிகபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 10ம் ஒழுங்கை, கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பப்படல்வேண்டும். (மாதிரி வைப்புச் சீட்டினை http://www.maco.jfn.ac.lk எனும் இணையத்தளத்தில் பார்வையிடலாம்). கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பம் - 2021/2022 (அணி - V)" எனக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக தொடர்புகளுக்கு : 021 222 3610 http://www.maco.jfn.ac.lk**

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(CR 36719) (3/6)



## Chelvanayakam Memorial Trust
### Reg. No.: TRUST 05/28 (14-10-2010)

The **Chelvanayakam Memorial Trust (CMT)** is a charitable trust established in 2010 and working with a vision of "A just and peaceful society where groups with diverse identities live in dignity, equality of opportunity and respect for plurality". CMT works in the areas of;

- Education
- Promoting non violence &
- Enhancing governance

CMT established & manages the Thanthai Chelva Auditorium (TCA) at Jaffna Central College serving the school and functioning as a public space partnering the educational, social & cultural reawakening of the war affected society.

### PROCUREMENT NOTICE

Sealed tenders are invited for the supply of the following

| Items | Sizes & Specifications | Quantity (No's) |
|---|---|---|
| 1. Silent Diesel standby Generator | 30 Kv Silent water cooled 3 phase Diesel Generator. | 1 |
| 2. Stackable Aluminium Chairs with arm rest for Auditorium | 1.8 mm Aluminium durable powder coated black or grey frame with high density foam cushioned bottom, back and arm rest. Heavy duty fire resistant washable blue fabric covers. Approx width 43 cm, height 93 cm & depth 59 cm. | 500 |

- Delivery: At site in Jaffna within 30 days of confirmation of order
- Prices should be all inclusive (including VAT) transport and installation for generator.
- Products manufactured or assembled locally with warrantee and after sales support will be preferred.

The sealed Tender Quotations should be on the suppliers letter head and to be submitted along with the all details including quality certificates on or before 20th December 2021 in the Tender Box, addressed to the Auditorium Manager, Thanthai Chelva **Auditorium, No. 114, Rajendra Prasad Road, Jaffna. Phone: +94 21 2227071.** CMT's policy is to procure locally manufactured or assembled items from Sri Lankan entrepreneurs especially from war affected areas

(CR 36746) (3/6)



## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 . 02 . 1932



உதிர்வு 10 . 12 . 2016

அமரர்
## இரத்தினம் சரஸ்வதிப்பிள்ளை
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி: ஏகாதசி

அன்பான தாயே!
எங்கள் குடும்பத்தின்
அணையா ஒளி விளக்கே!
ஆறாத துயரில் எமை ஆழ்த்தி விட்டு
மீளாத்துயிலில் நீங்கள் ஆழ்ந்து விட்டது ஏன் அம்மா!

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs 41592)(2/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி அருட்கவி

# சீ. விநாசித்தம்பிப்புலவரது

# குரு பூசைத்தினம்



**கார்த்திகை : ஏகாதசி**

வரப்பல னருளும் நாக
வரதநா ராய ணன்தன்
திருப்பதம் நினைந்து நித்தம்
தீமை வாராடி லன்னான்
அருட்கவி யிவைக ளோதும்
அடியவர் சுகம்ப டைத்துக்
கருக்கடல் நிந்திக் கண்ணன்
கழல் நிழல் வாழு வாரே

அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவரது குருபூசையானது இன்று (14.12.2021) பிலவ வருடம் கார்த்திகை இருபத்தெட்டாம் நாள் செவ்வாய்க்கிழமை அன்னாரது சமாதியில் முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெறும் என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**குடும்பத்தினர்**

(CS 869) 3/6)

# பொதுக்கூட்டம்

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெறும். கடந்த மாதம் இந்தக் கூட்டம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே எதிர்வரும் 18ஆம் திகதி கூட்டம் இடம்பெறும் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் கலந்துகொள்ளவுள்ளார்.

(ம-9)

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 14 . 05 . 1931

**மறைவு** 11 . 12 . 2021



## அமரர் கதிர்காமு தங்கம்மா

மாசார், பளையைப் பிறப்பிடமாகவும், பேராலை, பளையை வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமு தங்கம்மா அவர்கள் கடந்த (11.12.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாராயணபிள்ளை சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வீரகத்தி கதிர்காமு அவர்களின் அன்புத் துணைவியாரும், சிவபாக்கியம், இராசதுரை (கனடா), யோகேஸ்வரி (கனடா), செல்வரத்தினம் (கனடா), காலஞ்சென்ற சந்திரசேகரம், சண்முகநாதன் (கனடா), ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகரத்தினம், தனலக்சுமி (கனடா), காலஞ்சென்ற இராசமனோகரன், ரஞ்சினிதேவி (கனடா), புஸ்பலலிதா (கனடா), விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (14.12.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பேராலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**077 241 7183** (CR 36721) 3/6) **தகவல் : குடும்பத்தினர்**

"ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக"

# மரண அறிவித்தல்

**பிறப்பு** 24 . 06 . 1965

**இறப்பு** 13 . 12 . 2021



## தம்பிப்பிள்ளை சோதிலிங்கம்

(நோர்வே)

அரியாலையை பிறப்பிடமாகவும் நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சோதிலிங்கம் அவர்கள் நேற்று (13.12.2021) திங்கட்கிழமை நோர்வேயில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், தவமலர் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நமசிவாயம் மற்றும் பூமலக்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகனும், கஜானனன், டிலக்ஷன், கோபிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர் பஞ்சலிங்கம் (முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர், யாழ் கல்வி வலயம்), நாகேஸ்வரி, பாலசுப்பிரமணியம், தியாலிங்கம், சரஸ்வதி, கோசலாதேவி, யோகாதேவி, மகாலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கமலாதேவி, பேரம்பலம், யோகம்மா, சந்திராவதி, அமரர் செல்வராசா, சிவபாலசிங்கம் (துரை), குணதாசன், புஸ்பா, இராமசந்திரன், மலர், காண்டீபன், நவமலர், நகுலன் ஆகியோரின் அன்புமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.12.2021 வியாழக்கிழமை நோர்வேயில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கலைமகள் வீதி,**
**அரியாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## திருமதி செல்லையா சின்னாச்சி

குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், கொண்ட திருமதி செல்லையா சின்னாச்சி அவர்கள் நேற்று (13.12.2021) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தி லட்சுமி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற கந்தர் செல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தராசா, காலஞ்சென்ற அன்னலட்சுமி, கருணானந்தம், பரமசிவம் (கனடா), பஞ்சலிங்கம் (கனடா), ஜெயலட்சுமி (ஆசிரியை - யா/ புனித தெரேசா மகளிர் கல்லூரி, அச்சுவேலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிவநேசன் (சட்டத்தரணி), வசந்தி, கலாறஞ்சினி (கனடா), மாலா (கனடா), ம.சுரேஸ் (முன்னாள் பொது முகாமையாளர் - சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தபோதரன் (கனடா), ரமேஸ்தரன், கிருஷாந்தினி (கனடா) துஷியந்தன் (கனடா), கோகுலராஜ், அனுஷா, யசிதா, கஜிதா, கிந்துஷன் (கனடா), அபிநிதா (கனடா), ஆதிஸ் (கனடா), நிதுஷா, ஜலிஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2021) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக புத்தூர் அந்தராணை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 329 4731**
**077 375 4243**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 875) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் தடை சொல்லாத செய்தி

கட்டுரையாளர் : அ.நிக்சன்
நன்றி : கூர்மை இணையம்

போர் இல்லாதொழிக்கப்பட்டதொரு சூழலில், இலங்கை ஒற்றையாட்சி அரசு விரும்பும் உள்ளகப் பொறிமுறைக்கு ஏற்றமுறையில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை தென்படுகிறது.

இலங்கை இராணுவத்தின் கீழ்நிலை அதிகாரிகள் இருவருக்கு அமெரிக்காவுக்குள் நுழைவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த இரண்டு பேருடைய தடைகள் மட்டுமல்ல, இதற்கு அப்பாற்பட்ட பல நடவடிக்கைகளும் இலங்கைப் பொறுப்புக்கூறல் தொடர்பாக அமெரிக்கா மேற்கொள்ளவுள்ளதாக அறிக்கை வெளிப்படுத்துகின்றது. அதாவது தமிழர் தரப்பு மீதும் தடைகள் வரலாம் என்பதும், மீண்டும் ஐ. நா. மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா ஒபாமா காலத்து அணுகுமுறையைத் தொடரவுள்ளது என்பதுமே அதன் அர்த்தமாகும்.

ஆகவே அமெரிக்க மனித உரிமை நாள் அறிவிப்புக் குறித்து தமிழர்கள் அதீத மகிழ்ச்சி கொள்ளத்தேவையில்லை. அங்கே உட்பொதிந்திருக்கும் ஆபத்துக்கள் குறித்தே சிரத்தை கொள்ளவேண்டும் என்று நீண்ட காலமாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள நடவடிக்கைகளைக் கண்காணித்து வரும் பகிரங்கமாகப் பெயர் குறிப்பிட விரும்பாத தமிழ்ச் செயற்பாட்டாளர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை இராணுவ அதிகாரிகள் இருவர் உட்பட ஆறு நாடுகளின் இராணுவ மற்றும் அரசியல் அதிகாரிகள் பன்னிரெண்டு பேருக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தனது நாட்டை நோக்கிய பயணத்தடைவிதித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றது. அவர்களுக்கும் அப்பால் மேலும் சிலரையும் உள்ளடக்கி, மொத்தம் 15 பேருக்கும் 10 கட்டமைப்புகளுக்கும், திறைசேரி ஊடாகவும் பிறிதான தடை அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்ட பன்னிரெண்டு அதிகாரிகளும் முழுமையான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளவர்கள் என்ற தகவல்களின் அடிப்படையில், அந்த நபர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் உத்தியோகபூர்வமாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ அமெரிக்காவுக்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படையின் முன்னாள் லெப்டினன்ட் கொமாண்டர் சந்தன ஹெட்டியாராச்சி மற்றும் இராணுவ சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க ஆகியோரும் தடைப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனர்.

முன்னாள் இலங்கை கடற்படைப் புலனாய்வு அதிகாரி சந்தன ஹெட்டியாராச்சி 2008 முதல் 2009 வரை, "திருகோணமலைப் பதினொருவர்" என்று சொல்லப்பட்ட மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவராகக் குற்றஞ்சாட்டப்பட்டவர் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டு டிசெம்பர் காலத்தில், யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் எட்டுத் தமிழ்க் கிராமத்தவர்களைப் படுகொலைசெய்து மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகத் தெரிவித்து சுனில் ரத்நாயக்கவுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு பேருடைய தடைகள் மட்டுமல்ல இதற்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளும் இலங்கைப் பொறுப்புக்கூறல் தொடர்பாக மேற்கொள்ளவுள்ளதாக அமெரிக்க அறிக்கையின் தொனி காண்பிக்கின்றது. அதாவது தமிழர் தரப்பு மீதும் தடைகள் வரலாம் என்பதும், மீண்டும் ஐ. நா. மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா ஒபாமா காலத்து அணுகுமுறையைத் தொடரவுள்ளது என்பதுமே அதன் அர்த்தமாகும்.

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்குமான பொறுப்புக்கூறலுக்கு ஏற்ற வகையில் அமெரிக்கா எடுக்கும் நடவடிக்கையே இந்த இரு இராணுவ அதிகாரிகளுக்கான பயணத்தடை என்று அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி ஜே பிளிங்கென் அறிவித்திருக்கிறார்.

உகண்டாவைச் சேர்ந்த ஒருவர், சீனாவைச் சேர்ந்த நால்வர், வெள்ளை ரஷ்யா எனப்படும் பெலரஸ் நாட்டைச் சேர்ந்த இருவர், பங்களாதேஷைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒரு





வரும் இராணுவ லெப்ரினன்ட் கேணல் ஒருவரும் மெக்ஸிக்கோவில் ஒருவருமாக மொத்தம் பன்னிருவருக்கு அமெரிக்காவுக்குச் செல்லத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் உள்ள உய்குர் முஸ்லிம்கள் இன அழிப்புக்கு உள்ளாவதாக அமெரிக்க மற்றும் கனடா தரப்புகள் பகிரங்கமாகவே குற்றஞ்சுமத்தும் நிலையில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அறிக்கையில் சீனாவின் மோசமான மனித உரிமை மீறல் என்று மாத்திரமே குற்றஞ்சுமத்தப்பட்டு தடைப்பட்டியலில் சீன இராணுவ அதிகாரிகள் நால்வர் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இலங்கை ஒற்றையாட்சி அரசின் இராணுவத்தளபதி சவேந்திர சில்வா மீது 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் தடை விதித்திருந்தது. அப்போதைய அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ இத் தடையை தனித்துவமான அறிக்கையிடல் மூலம் பிறப்பித்திருந்தார். சவேந்திர சில்வாவுக்கு இலங்கையில் வழக்கு எதுவும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. போரின் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையில் உயர் பதவியும் வகித்திருந்தார். இந்த நிலையிலேயே மைக் பொம்பியோ இலங்கையின் அதியுயர்

> **அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தடைப்பட்டியல் அறிவிப்புத் தொடர்பாக தமிழர்கள் அதீத மகிழ்ச்சியடைய வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் இரண்டு பேருடைய தடைகள் மட்டுமல்ல, இதற்கு அப்பாற்பட்ட பல நடவடிக்கைகளும் இலங்கை தொடர்பாக மேற்கொள்ளவுள்ளதாக அறிக்கையின் தொனி வெளிப்படுத்துகின்றது. அதாவது தமிழர் தரப்பிலும் சிலருக்குத் தடைகள் வரலாம் என்பதே அதன் அர்த்தமாகும்.**



நிலையில் உள்ள அதிகாரியான சவேந்திர சில்வா மீது தடை விதித்திருந்தார். 2009 ஆம் ஆண்டு 58 ஆவது படைப் பிரிவின் தலைவராக சவேந்திர சில்வா பதவி வகித்திருந்தபோது, இறுதிக் கட்டப் போரில் மனித உரிமை மீறல் மற்றும் போர்க் குற்றங்களைப் புரிந்தவர் என்ற குற்றச்சாட்டிலேயே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பயணத் தடை அமைந்திருந்தது. ஆனால் ஜோ பைடன் தலைமையிலான அமெரிக்க நிர்வாகத்தின் இராஜாங்கச் செயலர் அன்டனி ஜே பிளிங்கென், இலங்கையின் கீழ் நிலை இராணுவ அதிகாரிகள் இருவருக்கே பயணத் தடை விதித்திருக்கிறார். அதுவும், 2009 இன அழிப்புப் போருக்குள் நேரடியாகச் செல்லாமல் 2000 ஆம் ஆண்டையும் 2008-2009 இல் திருகோணமலையையும் தொட்டுச் செல்ல ஆரம்பித்துள்ளார். அதுவும் சுனில் ரத்நாயக்கா என்ற இராணுவ அதிகாரி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் கடந்த ஆண்டு பொது மன்னிப்பு அடிப்படையில் விடுவிக்கப்பட்ட ஒருவர்.

ஆகவே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தடைப்பட்டியல் அறிவிப்புத் தொடர்பாக ஈழத்தமிழர்கள் அதீத மகிழ்ச்சியடைய வேண்டிய அவசியமேயில்லை. ஏனெனில், எதிர்காலத்தில் பொறுப்புக்கூறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்ற இராஜாங்கத் திணைக்கள அறிக்கையின் தொனி, தமிழர்கள் மீதும் தடைகள்வரும் என்ற செய்தியையும் சொல்லாது சொல்வதாகத் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஆகவே இலங்கையின் உள்ளகப் பொறிமுறைகளை வலியுறுத்தும் வகையிலேயே அதற்கு வழிகாட்டக்கூடிய முறையில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அறிவிப்பு அமைந்துள்ளது.

அத்துடன் 2015 ஆம் ஆண்டு மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் அமெரிக்காவின் விருப்பத்துக்கு ஏற்ப ஜெனீவா மனித உரிமைச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது போன்று. அடுத்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் அமெரிக்கா புதிய தீர்மானத்தைச் சமர்ப்பிக்கும் வாய்ப்புக்களும் உண்டு என்பதையே அந்த அறிக்கை சொல்லாமல் சொல்கிறது.

அதாவது இலங்கை அரசாங்கத்தின் உள்ளகப் பொறிமுறைக்கு ஏற்ற முறையில் ஜெனீவா தீர்மானத்தைக் கொண்டுவரும் அடிப்படையில் தமிழர் தரப்பின் மீதும் குற்றஞ்சுமத்தி ஈழத் தமிழர் விவகாரத்தை மூடிமறைக்கும் திட்டத்துக்கு மிக நிதானமாக ஜோ பைடன் நிர்வாகம் பிள்ளையார் சுழி போட ஆரம்பித்திருக்கிறது என்பதையும் இந்த அறிக்கை கோடிட்டுக் காண்பித்துள்ளது.

டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம் ஈழத்தமிழர் விவகாரத்தை இந்தியா மூலமாகவே அணுகியது. இந்தியாவின் விருப்புக்கு உடனடியாகக் கட்டுப்பட மறுத்த இலங்கை அரசை மிரட்டுவதற்கு 2020 பெப்ரவரியில் உயர் நிலைத் தளபதி சவேந்திர சில்வா மீது பயணத்தடையும், பின்னர் தனது பதவிக் கால இறுதிக்கட்டத்தில் 2020 ஒக்ரோபரில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட போதும் சவேந்திர சில்வா மீதான பயணத் தடை பற்றிய கேள்விகளுக்கு அப்போதைய அமெரிக்க ராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ பதிலளித்தும் இருந்தார்.

ஆனால், பைடன் ஆட்சி மாற்றத்துடன் இந்த நிலையை மாற்றி, அமெரிக்காவோடு இந்தியா ஊடாக அன்றி, தான் நேரடியாகவே பேரம்பேசும் நிலையை கோத்தாபய தலைமையிலான இலங்கை அரசு தோற்றுவித்துள்ளது.

தற்போது ஜோ பைடன் நிர்வாகம் ராஜபக்ச அரசாங்கத்துடன் இரகசியமாக அணுகியே ஈழத்தமிழர் தொடர்பான விடயங்களை மேற்கொண்டு வருகின்றது.

ஒரு சில நாள்களுக்கு முன்னர் அமெரிக்காவின் ஆளும் மற்றும் எதிர்த்தரப்பைச் சேர்ந்த பிரதான கட்சிகளின் வெளியுறவு சார்ந்த மக்கள் பிரதிநிதிகள் இருவர், இலங்கையில் அரசியல்தீர்வு ஏற்பட வழிவகை செய்ய வேண்டுமென்றும் அது அதிகாரப் பகிர்வின் ஊடாகவும், பிரிக்கப்பட முடியாத இலங்கை என்ற அடிப்படையில் அமைய வேண்டுமெனவும் கருத்து வெளியிட்டிருந்தார்கள். அவர்களின் கூற்று, ஈழத் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை மறுப்பதாகவும், சமஷ்டிக்கோரிக்கையை அங்கீகரிக்காததாகவுமே வடிவமைக்கப்பட்டிருந்தது. இதுவே ஜி. எல். பீரிஸின் வெளியுறவுக் கொள்கையின் வெற்றியாகவும், மிலிந்த மொராகொட, மற்றும் பஸில் ராஜபக்ச ஆகியோரின், ரொபேர்ட் பிளேக்கின் ஊடான காய் நகர்த்தலாகவும் இருப்பதாக அமெரிக்காவில் தகவல் அறிந்த வட்டாரங்கள் கூர்மைக்குத் தெரிவித்தன. ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தலைமையிலான குழுவினர் அமெரிக்கா சென்று பேச்சு நடத்திய பின்னரே அவர்கள் அவ்வாறு கருத்து வெளியிட்டிருந்தனர். என்பதும் இங்கு நோக்கத்தக்கது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அணியும் அதிகாரப்பரவலாக்கம் பற்றியே பேசியிருந்தது. இதனையே உலகத் தமிழர் பேரவை தங்களுடைய செயற்பாடாகக் காட்டிக்கொள்ளவும் முற்பட்டது.

இதன் பின்னணியிலேயே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் சர்வதேச மனித உரிமைகள் தினம் அன்று வெளியிட்ட அறிக்கையில் இலங்கை தொடர்பான கூற்றுக்களையும் நாம் நோக்க வேண்டும். அமெரிக்க இலங்கை நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானிப்போர், இதனை இலங்கை ஒற்றையாட்சி அரசின் உள்ளகப் பொறிமுறைக்கு ஏற்ற செயற்பாடு என்றே சொல்வர்.

அதாவது பஸில் ராஜபக்ச நிதி அமைச்சராகப் பதவியேற்க முன்னர் கடந்த ஜூன் மாதம் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார். அங்கிருந்து இணையவழிமூலம் சுமந்திரனோடு உரையாடியிருந்தார். பின்னர் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ். சுமந்திரன் ஆகியோர் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் தூதுவர் முன்னிலையிலேயே சந்தித்துப் பேசியிருந்தனர்.

(மறுபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்துச் சேவை இன்றி கல்லாறு மாணவர்கள் சிரமம்



கிளிநொச்சி, டிசெ.14
கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்லாறுக்கு, மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் வகையில் போக்குவரத்துச் சேவைகள் நடத்தப்பட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
தற்போது காலை நேரம் மட்டுமே பாடசாலை மாணவர்களுக்கான பஸ் சேவை நடத்தப்படுகின்றது. அந்தப் பகுதியில் இருந்து பாடசாலைக்குச் செல்லும் 35க்கும் மேற்பட்ட மாணவர்கள் பாடசாலை முடிந்ததும் சுண்டிக் குளம்சந்தியில் இருந்து தமது வீடுகளுக்கு சுமார் 7 கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டியிருக்கின்றது.
இந்தப் பகுதியில் உள்ள கல்லாறு, பிரமந்த ணாறு, நாதன் திட்டம், மயில்வாகனபுரம் போன்ற கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் போக்குவரத்துச் சிக்கலால் பாடசாலைகளில் இருந்து இடைவிலகும் நிலைமையும் காணப்படுகின்றது.
மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் வகையில் போக்குவரத்துச் சேவைகளை வழங்க வேண்டும் என்று கல்லாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-113)

## கராத்தே போட்டியில் சர்வதேச மட்டத்தில் மூன்றாம் இடம்



கொடிகாமம், டிசெ.14
இயற்றாலை அ.மி.த.க பாடசாலையில் பிரிட்டிஷ் அக்கடமி அன்ட் ஷொடோகன் கராத்தே நிறுவனத் தால் நடத்தப்பட்ட இணையவழி சம்பியன்ஷிப் போட்டியில் பங்குபற்றிய மாணவன் சர்வதேச மட்டத்தில் மூன்றாம் இடத்தை பெற்றுள்ளார். தரம் 4 இல் கல்வி கற்கும் கமலேந்திரன் துவிசன் என்ற மாணவனே இவ்வாறு சர்வதேச மட்டத்தில் மூன்றாம் இடத்தை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். (ச-159)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

கிளிநொச்சி, டிசெ.14
பளை இந்திராபுரத்தில் வசிக்கும் மாணவர்களுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.
வவுனியா காருண்யா மன்றமும், ஜீ.தமிழ் போக்கஸ் அமைப்பினரும் இணைந்து 25க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு உபகரணங்களை வழங்கினர். (ய-ரி1, 9)



# உறுப்பினர்களுக்கு நியமனக்கடிதங்கள்

சாவகச்சேரி,டிசெ.14
சாவகச்சேரி பிரதேச மத்தியஸ்தர் சபையின் புதிய உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்கள் கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டன. 22 பேருக்கு இந்த நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.
சபையின் தவிசாளர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட மத்தியஸ்தர் சபைகளின் இணைப்பாளர் ப.சனாதன சர்மா, சாவகச்சேரி நகரசபை தவிசாளர் சிவமங்கை இராமநாதன், தென்மராட்சி பிரதேச செயலர் உஷா சுபலிங்கம் , சாவகச்சேரி ,கொடிகாமம் வணிகர் கழகங்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.(ஓ-4,9)

# நிர்வாக சபைத் தெரிவு

சாவகச்சேரி, டிசெ.14
நாவற்குழி மேற்கு ஜே/ 294 கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாக சபைத் தெரிவு எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவற்குழி மேற்கு ஐயனார் கோவிலடி பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
நாவற்குழி மேற்கு கிராம அலுவலர் பிரிவில் நிரந்தர முகவரியைக் கொண்ட 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டு நிர்வாக சபை தெரிவுக்கு ஒத்துழைக்குமாறு நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-ரி1,159)

# பிரபாகரன் மீது அவதூறு டக்ளஸுக்குக் கண்டனம்!

## கரைச்சி பிரதேச சபையில் சமத்துவக் கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 14
என்றும் தமிழ் மக்களின் மனங்களில் நிறைந்திருக்கும் தலைவரை அவமானப்படுத்தும் வகையில் நாடாளுமன்றத்தில் இலங்கை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறிய கருத்துக்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் எனக் கரைச்சி பிரதேசசபையின் சமத்துவக் கட்சியின் உறுப்பினர்களான இ.மயில்வாகனம் மற்றும் க. லோறன்ஸ் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.
அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;
தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர், போதைப் பொருள் கடத்தினார் என்றும் அவர் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டார் என்றும் நாடாளுமன்றத்தில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பேசியிருந்தார். எனவே இவரது கருத்தை நாம் எமது கட்சி சார்ந்து வன்மையாகக் கண்டிக்கின்றோம்.
இனத்தின் விடுதலைக்காகத் தான் வரித்துக் கொண்ட கொள்கைக்காக தன்னேயே அர்ப்பணித்தவர் தலைவர் வே.பிரபாகரன். அவ்வாறான ஒருவரை தன்னுடைய அரசியலுக்காக அவமானப்படுத்துவதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.
உங்களுடைய தலைவர் யார் என தமிழ் மக்கள் மத்தியில் இப்பொழுது மட்டுமல்ல எப்பொழுது கேட்டாலும் அவர்கள் கூறுவது அந்த ஒரு பெயரை மாத்திரமே.
எனவே அவ்வாறான ஒருவரை அவமானப்படுத்துவதை தமிழ் மக்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள் என்பதை அமைச்சர் புரிந்து கொள்ள வேண்டும் - என்றனர். (ம-214)

# முல்லை. பேருந்துச்சாலைப் பணத்தை கையாடியவர் தொடர்பில் முறைப்பாடு!

முல்லைத்தீவு, டிசெ. 14
முல்லைத்தீவு அரச பேருந்து சாலைக்குச் சொந்தமான பணத்தைக் கையாடிய உத்தியோகத்தர் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் பிராந்திய பாதுகாப்பு முகாமையாளர்களால் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.
கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வடபிராந்திய பாதுகாப்பு முகாமை யாளரும், பாதுகாப்பு உத்தியோகத்தரும் திடீரென இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முல்லைத்தீவு சாலைக்குப் பரிசோதனைக்காகச் சென்றுள்ளார்கள்.
அப்பொழுது வங்கியில் வைப்பிலிட வேண்டிய சாலையினுடைய பணத்தை பரிசோதனை செய்தபோது அந்தப் பணத்தில் 8 ஆயிரம் ரூபா குறைவாக இருப்பது தெரியவந்துள்ளது.
இதையடுத்தே மேற்படி முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. (ம)

# அமெரிக்காவின் தடை...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னர் பேராசிரியர் பீரிஸ் வெளியுறவு அமைச்சராகவும் பஸில் ராஜபக்ச நிதி அமைச்சராகப் பதவியேற்றனர்.
இந்தவொரு பின்னணியிலேயே சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் குழுவினர் அமெரிக்கா சென்று பேச்சு நடத்தியுமிருந்தனர்.
ஆகவே சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு அமெரிக்கா வெளியிட்டிருக்கும் அறிக்கையில், அதுவும் குறிப்பாக சவேந்திர சில்வா போல அன்றி இலங்கையின் உள்ளகச் சட்ட விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட கீழ்நிலை இராணுவ அதிகாரிகள் இருவருக்குத் தடை விதிக்கப்பட்டமையும், அமெரிக்காவின் ஆளும் மற்றும் எதிர்த்தரப்பைச் சேர்ந்த பிரதான கட்சிகளின் வெளியுறவு சார்ந்த மக்கள் பிரதிநிதிகள் இருவர் பிரிக்கப்படாத இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசியதற்கும் தொடர்பு இருப்பதாக அமெரிக்க இலங்கைச் செயற்பாட்டை அவதானிப்போர் எடுத்தியம்பினர்.
அமெரிக்காவுடன் முரண்படுவதுபோல காண்பித்துக் கொண்டு சீனாவின் கடும் பிடிக்குள் இருந்து மீள்வதற்கான உத்தியை இலங்கை கையாண்டு வருகின்றது என்பதையும் உன்னிப்பாக அவதானிப்போரால் கூற முடியும்.
இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக அமைச்சரவை அந்தஸ்தோடு பதவி வகிக்கும் முன்னாள் அமைச்சர் மிலிந்தமொற கொட, வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச ஆகியோரின் திட்டம் அரங்கேறி வருகின்றது.
அதாவது ஜெனிவா மற்றும் சர்வதேச அரங்கில் இருந்து ஈழத்தமிழர் விவகாரம் முற்றாக நீக்கம் செய்யப்பட வேண்டுமென்பதே இவர்களின் திட்டம்.
இவர்களில் மிலிந்தமொற கொட, பேராசிரியர் பீரிஸ் ஆகிய இருவரும் சமாதானப் பேச்சுக் காலத்தில் அமைச்சர்களாகப் பதவி வகித்திருந்தவர்கள்.
ஆகவே போரின் பின்னரான இலங்கை ஒற்றையாட்சி அரசின் உள்ளகப் பொறிமுறை என்ற விருப்பத்தை அரங்கேற்ற அமெரிக்காவும் இறுக்கிப் பிடிக்கிறது என்பதே நிதர்சனம்.
இலங்கை ஒற்றையாட்சி அரசின் அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதன் மூலம், தனது புவிசார் அரசியல் நோக்கங்களையும் அமெரிக்கா அடைய முற்படுகின்றது.
கொழும்பில் இருந்த அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ஸ்ரெப்லிஸ் மாற்றலாகிச் சென்றுள்ள நிலையில், அமெரிக்கத் தூதகரத்தின் இரண்டாம் நிலை அதிகாரியான மார்ட்டின் கெலி இலங்கை விவகாரத்தைக் கையாண்டு வருகின்றார். இலங்கையின் தென் மாகாணத்தில் உள்ள காலி, மாத்தறைப் பிரதேசங்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை சென்று சிங்கள மரபுரிமைச் சின்னங்களைப் பார்வையிட்டிருக்கின்றார். காலியில் உள்ள டச்சுக் கோட்டையைப் புனரமைக்க நூறு ஆயிரம் அமெரிக்க டொலரை அன்பளிப்பும் செய்திருக்கிறார். அமெரிக்காவில் மனித உரிமைத் தினத்தன்று மட்டுப்படுத்தப்பட்ட பயணத்தடை வெளியாகும் அதேவேளை, தீவில் மார்ட்டின் கெலி தென்மாகாணத்துக்குச் சென்றிருக்கிறார் என்பதும் இங்கு நோக்கற்பாலது.
அதேவேளை ஒரு சில கிழமைகளுக்கு முன்னர் திருகோணமலைக்குச் சென்றிருந்த ஜேர்மன் நாட்டுத் தூதுவர் அத் துறை முகத்தின் கேந்திர முக்கியத்துவத்தைப் பற்றிருவிற்றரில் அனைவரின் கவனத்தை ஈர்க்கும் நோக்கோடு பதிவிட்டிருந்தமையும் இங்கு ஒன்றுசேரக்கோர்த்து நோக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இந்தமாத....*

அநுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

களியாட்டம், சமய நிகழ்வுகள் போன்றவற்றுக்கு சுகாதாரக் கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலமாக மாத்திரம் கொரோனா உள்ளிட்ட தொற்றுக்களைத் தடுத்துநிறுத்த முடியாது. இவ்வாறான விடயங்களில் மக்கள் சரியான சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவதில்லை என்பதையே கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் காட்டுகின்றன. எனவே, இந்த அபாயத்தைக் கட்டுப்படுத்த அனைவரும் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் பெரும் சனநெரிசல் ஏற்படக்கூடும்.

**பக்கவிளைவு?**

மூன்றாவது கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதால் பல்வேறு பக்கவிளைவுகள் ஏற்படும் என்ற வதந்திகள் பொய்யானவை. தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதே நாட்டுக்காக எங்களால் செய்யக்கூடிய சிறந்த செயல் - என்று இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-இ)

*13 முழுமையான......*

யுள்ளார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இது குறித்து அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;-

1950க்ளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி உருவாகிய பொழுது, தந்தை செல்வா அவர்கள் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, சமஷ்டி கோரிக்கையை முன்வைத்தார். 1976ஆம் ஆண்டுவரையில், அவரது சமஷ்டி கோரிக்கையில் எத்தகைய முன்னேற்றத்தையும் காணமுடியவில்லை. தந்தை செல்வாவுக்கும் தென்னிலங்கை அரசியல் தலைமைகளுக்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் அனைத்தும் அரசதரப்பால் கிழித்தெறியப்பட்டன. இதன் காரணமாக பிரித்தானியரிடம் தமிழர்கள் இழந்த இறையாண்மையை மீளப்பெறு வதற்கான தமிழர்களுக்கான தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான எத்தகைய பொறிமுறைகளோ, திட்டங்களோ, மூலோபாய, தந்திரோபாயங்களோ அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியினரிடம் இருக்கவில்லை. இலங்கை அரசாங்கத்தின் தொடர்ச்சியான இன ஒடுக்குமுறைகளும், அழிப்புகளும் தமிழ் இளைஞர்களை ஒரு தற்காப்பு நிலைக்குத் தூண்டியது. இதன் காரணமாக, பல்வேறுபட்ட ஆயுத அமைப்புகள் தோற்றம்பெற்று, தமிழின விடுதலைக்காகப் போராடின.

இந்த வரலாற்றைப் புரிந்துகொள்ளாதவர்கள் அல்லது புரிந்துகொள்ள விருப்பமி ல்லாதவர்கள், தங்களுக்குத் தாங்களே சாணக்கியர்கள் என்று ஒருவருக்கொருவர் பட்டம் சூட்டிக்கொண்டும் புகழாரம் சூட்டிக் கொண்டும் தவறான கருத்துகளையும் அணுகுமுறைகளையும் தமிழ் மக்கள் மத்தியில் விதைக்க முயற்சிக்கின்றனர்.

பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும்படி சில கட்சித் தலைவர்கள் பேசுகின்றனர் என்றும், மகிந்த ராஜபக்சவே பதின்மூன்றாவது திருத்தத்துக்கு மேலே சென்று இந்த பிரச்சினையைத் தீர்ப்பேனென்று பலமுறை கூறினார் - என்றும் ஆனால், அவற்றையெல்லாம் மறந்து போன சில தமிழ்த் தலைமைகள் பதின்மூன்றை நிறைவேற்றும்படி இப்பொழுது கோரிக்கைகளை முன்வைக்கின்றமை தமிழருக்குச் செய்யும் துரோகம்" - என்றும் இந்த சாணக்கியர்கள் சுன்னாகத்தில் கடந்த சனிக்கிழமை நடத்திய கலந்துரையாடலில் கூறியுள்ளனர்.

மாகாண சபைகளுக்கு அரசியல் சாசன ரீதியில் வழங்கப்பட்டுள்ள பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்திக்கொண்டு, அதன் பிறகு சமஷ்டியை நோக்கி முன்னேற வேண்டும் என்பதே தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைக்காகக் குரல்கொடுக்கும் அரசியல் தலைமைகளின் இன்றைய நிலை.

ஆனால், அரசாங்கம் அதனையே நடைமுறைப்படுத்த முடியாதென பிடிவாதம் பிடிக்கிறது. இந்த நிலையில் இந்த சாணக்கியர்களும் பதின்மூன்றை ஏற்கமாட்டோம் என்று கூறுவது இவர்கள் யாருடைய நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றனர் என்ற கேள்வியை எழுப்புகிறது - என்றுள்ளது. (த-20)

*மீனவர்....*

நேற்றுமுன் தினம் காணாமற்போயிருந்த நிலையில், அவர்களில் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பருத்தித்துறையை சேர்ந்த தர்ஷன் (வயது-19) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். இதே இடத்தைச் சேர்ந்த செந்தூரன் (வயது-28) இதுவரை கண்டறியப்படவில்லை. அவரைத்தேடும் நடவடிக்கையில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மதியம் மூன்று மீனவர்கள் கோந்தைப்பிட்டி கடலில் தமது படகை செலுத்தி தொழிலுக்குச் செல்ல சரி பார்த்துள்ளனர். இதன்போது மூன்று மீனவர்கள் உள்ளடங்கலாக 8 பேர் படகில் இருந்துள்ளனர். அதன்போது படகின் வெளி இணைப்பு இயந்திரம் திடீரென இயங்க மறுத்துவிட்டது. அந்தநேரம் காற்று வீசிக் கொண்டிருந்ததால், படகு கடலில் நகர்ந்து கொண்டிருந்தது. இதன்போது படகின் முன் அணியத்தில் நின்ற ஒருவர் திடீரென கடலில் வீழ்ந்து கடல் நீரில் அடித்துச் செல்லப்பட, அவரைக் காப்பாற்றும் நோக்கில் மற்றொரு மீனவர் கடலில் குதித்துள்ளார். எனினும், இரு மீனவர்களும் கடலில் இழுத்துச் செல்லப்பட்டனர். அவர்களை மீட்க ஏனையவர்கள் போராடியும் பயனளிக்கவில்லை. நீண்டநேரத்தின் பின்னர் குறித்த படகின் வெளி இணைப்பு இயந்திரம் இயங்கத்தொடங்கியது. படகிலிருந்த ஏனையோர் பாதுகாப்பாக கரை திரும்பி, ஏனைய மீனவர்களின் உதவியுடன் கடலில் இரண்டு மீனவர்களையும் தேடத்தொடங்கினர்.

எனினும், நேற்றுமுன்தினம் இரவுவரை மீனவர்கள் மீட்கப்படவில்லை. நேற்றுக் காலையும் தேடுதல் தொடர்ந்தது. இதன் போதே, கோந்தைப்பிட்டி கடலிலிருந்து சற்றுத் தொலைவில் தர்ஷன் சடலமாக மீட்கப்பட்டார்.

மற்றைய மீனவரை மீனவர்கள் தேடிவருகின்றனர். மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-56)

*சிமெந்து...*

ணம் காங்கேசன்துறையில் உள்ள சிமெந்து தொழிற்சாலையை இன்றுவரை மூடிவைத்திருப்பது ஏன்? - என்று, மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தேசிய அமைப்பாளர் விமல் ரத்நாயக்க கேள்வியெழுப்பினார்.

மக்கள் விடுதலை முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அரசாங்கத்தின் 16 வருடங்கள் பிரதமர் ஆட்சியில், 12 ஆண்டுகள் ராஜபக்சவின் குடும்பமே பிரதமராக இருந்துள்ளது. எனினும், நாட்டின் அபிவிருத்தி, கிராம விருத்தி வீழ்ச்சியடைந்துள்ளன. முஸ்லிம் காங்கிரஸ், ரிசாத் பதியுதீனின் கட்சி எதிர்க்கட்சி போல இருந்துகொண்டு அரசாங்கத்தின் வரப்பிரசாதங்களைப் பெறுகிறார்கள். மைத்திரிபால சிறிசேனவும் அப்படித்தான். அரசை விமர்சித்துக் கொண்டு அரசுக்கு ஆதரவு வழங்குகிறார்.

மன்னார் பகுதியில் கீரிச்சம்பா அதிகம் விளையும் பிரதேசமாகும். ஆனால், அங்கு யூரியா இல்லை. 18 ஆயிரம் ரூபா செலுத்தி எப்படியோ சிலர் அதைப் பெறுகிறார்கள். உரம் இல்லாமையால் நெற் பயிர்கள் மஞ்சள் நிறமாக காட்சி அளிக்கின்றன.

மன்னாரில் சிமெந்து தொழிற்சாலை அமைப்பதற்காக 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலிருந்து வெளியேறுமாறு கூறப்பட்டுள்ளது. ஆனால், ஏற்கனவே காங்கேசன்துறையில் அமைக்கப்பட்ட சிமெந்து தொழிற்சாலை இன்னும் இயங்காமலேயே உள்ளது.

இதேவேளை, இந்தியாவை அபிவிருத்தி செய்ய முடியாத அதானி, அம்பானி குடும்பம் இலங்கையை எவ்வாறு அபிவிருத்தி செய்ய முடியும்? என்றும் அவர் கேள்வியெழுப்பினார். (த-20)

*உருவாகவுள்ளது....*

நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எந்த காரணியை மையப்படுத்தி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது தெளிவுப்படுத்தப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் நாடாளுமன்ற அமர்வை நிறைவுறுத்தி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

இதற்கமைய, 2022 ஆம் ஆண்டுக்கான புதிய நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் ஜனவரி மாதம் 18 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு மீள ஆரம்பமாகவுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்ற அமர்வு நிறைவுறுத்தப்படுவதன் ஊடாக சகல தெரிவுக்குழுக்களும் செயலிழக்கின்றன. எனினும், தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் விசேட தெரிவுக்குழு மற்றும் உயர் பதவி தொடர்பான நாடாளுமன்றக்குழு என்பன மாத்திரம் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என நாடாளுமன்ற படைக்கள சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்ற அமர்வை ஜனாதிபதி இடைநிறுத்துவதென்பது சாதாரண நடவடிக்கை. அதில் வேறு நோக்கம் எதுவும் கிடையாது. நாடாளுமன்றம் கூடும்போது குழுக்கள் மறுசீரமைக்கப்படும். அதேபோல சபை நடவடிக்கைகளையும் உரிய வகையில் முன்னெடுக்க முடியும்." - என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார். (த-44)

*முதலாம் ......*

அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில்,

புதிதாக திறக்கப்பட்ட நெடுந்தூர சேவைக்கான தனியார் பஸ் நிலையத்திலிருந்து எதிர்வரும் 15ஆம் திகதியிலிருந்து சேவையில் ஈடுபடுவதென முன்னர் தீர்மானித்திருந்தோம். எனினும், ஒரு சில மாற்றங்களைச் செய்ய வேண்டியுள்ளமையால், எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து குறித்த பஸ் நிலையத்திலிருந்து சேவையை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளோம்.

குறித்த புதிய பஸ் நிலையத்தை மக்கள் பாவிப்பதற்கும் நேர்த்தியான ஒரு போக்குவரத்து சேவையை மக்களுக்கு வழங்குதற்காகவும் இலங்கை போக்குவரத்து சபையினருடன் இணைந்து சேவையாற்றுவதற்கு இணங்கியிருந்தோம்.

எனினும், பல மட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட சந்திப்புகளிலும் அது கைகூடவில்லை. குறிப்பாக வடக்கு ஆளுநர், நகர அபிவிருத்தி அதிகார சபையினர், மாநகர முதல்வர், மாவட்டச்செயலர் தலைமையில் கூடி ஆராயப்பட்டது. எனினும், இ.போ.ச.வினர், சாதகமான நடவடிக்கைக்கு வரத் தவறியதன் காரணமாக தற்போது தனியார் துறையினரை புதிய பஸ் நிலையத்தை பயன்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதற்கு நாம் தயாராகி வருகின்றோம். அதற்கு பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த-27)

*கொரோனாவால்...*

காய்ச்சல் இருந்துள்ளது. நேற்றுமுன்தினம் மூச்சுத் திணறலுக்கு ள்ளான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். சடலம் சுகாதார விதிமுறைகளின்படி தகனம் செய்யப்படவுள்ளது. (த-26)

*ஆணைக்குழுவுக்கு.....*

கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

காணாமற்போனோர் தொடர்பான முன்னைய ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்கள் ஆகியவற்றின் கண்டுபிடிப்புக்களை மதிப்பீடு செய்தல் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் எடுப்பதற்காக குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு கிளிநொச்சிக்கு பயணம் மேற்கொண்டிருந்தது. இதன்போதே குறித்த ஆணைக்குழுவிலும் தமக்கு தீர்வு பெற்றுத்தர முடியாது எனவும், ஏற்கனவே அமைக்கப்பட்ட ஆணைக்கழுக்கள், காணாமற் போனோர் அலுவலகத்தினால் எவ்வித தீர்வும் எட்டப்படாத நிலையில் இந்த ஆணைக்குழுவும் எமக்கு எத்தீர்வையும் வழங்காது என தெரிவித்தே அவர்கள் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். (த-இ)

*வவுனியாவில்...*

சென்ற சில மணிநேரத்தில் உயிரிழந்தார் என்று மருத்துவமனைத் தரப்புத் தெரிவித்தது. இந்த நிலையில் அவரது இறப்புக்கான காரணம் தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவம், வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

ஏற்கனவே சினோபார்ம் இரண்டு டோஸ் தடுப்பூசிகளையும் பெற்றிருந்த அவர், நேற்று அங்குள்ள பொதுநோக்கு மண்டபத்தில் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டார்.

சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலுக்கு அமைய தடுப்பூசி ஏற்றிய பின் சிறிது நேரம் அங்கு அமர்ந்து இருந்துவிட்டு சைக்கிளில் வீடு நோக்கி சென்றுள்ளார்.

வீடு சென்ற சில மணி நேரத்தில் திடீரென அவர் உயிரிழந்தார்.

அவரது சடலம் வவுனியா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா, காத்தார் சின்னக்குளம் பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தார்.

சடலத்துக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. உடற்கூற்று பரிசோதனையின் பின்னரே இறப்புக்கான காரணம் தெரியவரும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

## 13 8,022 பேருக்கு 3ஆவது டோஸ்

இதேவேளை - நாட்டில் நேற்றைய தினம் 41 ஆயிரத்து 470 பேருக்கு பைஸர் மூன்றாம் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞான பிரிவு தெரிவித்துள்ளது. இதன்படி, இதுவரையில் மூன்றாம் தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 13 இலட்சத்து 8 ஆயிரத்து 22ஆக அதிகரித்துள்ளது. (த-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை பூமணி



தோற்றம் : 27.09.1929 மறைவு : 13.12.2021

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தை பிறப்பிடமாகவும் பெருமாள் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பூமணி நேற்று (13.12.2021) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகமணி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இரவீந்திரன், முரளிதரன் மற்றும் கௌசல்யா (வவுனியா), பிரபாகரன் (பிரபா பார்மசி), கெங்காதரன் (பிரான்ஸ்), யசோதரா (ஆசிரியர் - யா/இந்து மகளீர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பவளம், கலாநிதி, தேவேந்திரம் (வவுனியா), உமேஸ்வரி (NSB-யாழ் கிளை), கிறிஸ்ரல் (பிரான்ஸ்), விக்னேஸ்வரமூர்த்தி (அதிபர்-யா/அராலி கிழக்கு அ.மி.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, இராசமணி, சின்னத்துரை மற்றும் அருமைநாயகம் ஆகியோரின் அன்பு சகோதரியும், மாயா, திவ்யா, திவீதா, வித்யா, மயூரன், தேவயானி, வியாசன், கௌசிகன், நர்மதா, கௌதமன், அபிநயா, பொலின், அந்துவான், துவாரகன், பரத்வாசன், ஹரிப்ரியா ஆகியோரின் பேர்த்தியும், துசாரா, மாதுரி, நிதின், நவின் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2021) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**6/5, பெருமாள் கோவில்**
**வடக்கு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தொடர்புகளுக்கு:**
**பிரபாகரன் (மகன்) - 077 844 5649**
**தேவேந்திரம் (மருமகன்) - 077 6016 092**
**யசோதரா (மகள்) - 077 071 2303**

(CS 870) 1/6

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை சின்னராசா



பிறப்பு : 05.12.1930 இறப்பு : 10.12.2021

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வளன்புரம் கொழும்புத் துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சின்னராசா கடந்த (10.12.2021) வெள்ளிக்கிழமை கால மானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், மணியின் அன்புக் கணவரும், மோகனதாஸ் (டென்மார்க்), சந்திரதாஸ் (லண்டன்), வனிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், வனயா (டென்மார்க்), விக்டோரியா (லண்டன்), காலஞ்சென்ற அன்ரன் யோசப் (அமலன் மாஸ்டர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கக்கீம் அம்றி கத்லின் (Social work - டென்மார்க்), மைக் கன்சன் ஜெனிபர் (Teacher-டென் மார்க்), Dr.ஜக்சப் பிரவீன் PhD (லண்டன்), சத்திய பிரசாந் B.Eng (லண்டன்), ஜக்குலின் பிரிதா BA Finance (லண்டன்), டெஸ்மன் ஜெசுறான் (Software Engineer and financial Advisor) கத்தரின் சஜானு (IYAP Internship) ஆகியோரின் அன்புப் பேரனும், கக்கீம் அம்றி சொறொனின் அன்புப் பூட்டனும் ஆவார்..

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2021) புதன் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:**
**076 444 2252**

(CS 871)(1/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு உதவ இந்தியா மும்முரம்

கொழும்பு, டிசெ.14

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கையை மீட்டெடுப்பதற்கு, அவசர உதவித்திட்டப் பொதிகளைத் தயாரிப்பதில் இந்தியா மும்முரம் காட்டி வருகின்றது - என்று இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.



இந்தியாவின் பொருளாதார விடயங்களைக் கையாளும் பிரபல பத்திரிகையான த எக்கொனமிக் ரைம்ஸ் நாளேடு, பெயர் குறிப்பிடப்படாத உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. உணவு மற்றும் மருத்துவம் பாதுகாப்பு, எரிசக்தி பாதுகாப்பு, நாணயப் பரிமாற்றம் (தற்காலிக பண ஏற்பாடு), உட்பட பல விடயங்களில் இலங்கைக்கு உதவ, அவசரத் திட்டங்களைத் தயாரிப்பதில் இந்தியா மும்முரம் காட்டி வருகின்றது என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

## ஓய்வூதிய வயதை உயர்த்த தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு

அரச ஊழியர்களின் ஓய்வூதிய வயது எல்லையை 65 ஆக உயர்த்துவதற்கான வரவு - செலவுத்திட்ட முன்மொழிவை பல தொழிற்சங்கங்கள் எதிர்க்கின்றன என்று பொதுச் சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே. ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தொழிற்சங்கங்களின் போராட்டம் தொடர்பில் அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. தொழிலாளர்கள் விரும்பவில்லை என்றால் முன்மொழிவை யார் நிறைவேற்றுவது என்ற கேள்வியும் எழுந்துள்ளது -என்றார்.

அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் அரச ஊழியர்களின் ஓய்வூதிய வயதெல்லை 65 ஆக உயர்த்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## எரிவாயு விநியோகத்தில் மீண்டும் நெருக்கடி

கொழும்பு, டிசெ.14

நாட்டில் எரிவாயு விநியோகத்தில் மீண்டும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. பல பகுதிகளில் லாஃப்ஸ் எரிவாயு விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதுடன் லாஃப்ஸ் எரிவாயு கிடைக்கவில்லை எனவும் நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது.

லிட்ரோ நிறுவனம் புதிய நியமங்களின்கீழ் சந்தைக்கு எரிவாயுவை விநியோகித்தாலும், நுகர்வோர் பழைய கையிருப்பில் கொள்வனவு செய்யப்பட்ட எரிவாயுச் சிலிண்டர்களைக் கொண்டு வருவதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. கடந்த 4 ஆம் திகதிக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட எரிவாயு சிலிண்டர்களுக்குப் பதிலாக புதிய சிலிண்டர்களை வழங்குமாறு அண்மையில் நுகர்வோர் விவகார அதிகார சபை லிட்ரோ நிறுவனத்துக்கு உத்தரவிட்டது. இதன் காரணமாக சீல் வைக்கப்படாத பிரச்சினைக்குரிய எரிவாயு சிலிண்டர்களை மாற்றுவதற்காக வாடிக்கையாளர்கள் கொண்டு வந்தபோது புதிய சிலிண்டரை வழங்க வாடிக்கையாளர்களிடம் கால அவகாசம் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நாட்டின் பல பகுதிகளில் எரிவாயு தொடர்பான சம்பவங்கள் தொடர்ந்தும் பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## 'யுகதனவி' ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படாது

### பந்துல தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.14

'யுகதனவி' ஒப்பந்தத்தை மீளப்பரிசீலனை செய்யவோ, இரத்துச் செய்யவோ முடியாது என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அமெரிக்க நிறுவனத்துடனான யுகதனவி ஒப்பந்தத்தில் நாட்டுக்கு எதிரான விடயங்கள் ஏதும் உள்ளடக்கப்படவில்லை.

யுகதனவி மின் நிலையத்தின் 40 வீதப் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் ஒப்பந்தம் தொடர்பிலான உள்ளடக்கங்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அமைச்சரவையின் அனுமதியுடன் கைச்சாத்திடப்பட்டது. அம்பாந்தோட்டை துறைமுகம் சீன நிறுவனத்துக்கு 99 வருடங்கள் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தை மீள்பரிசீலனை செய்யவும், இரத்துச் செய்யவும் முடியாது.

சர்வதேச ஒப்பந்த சட்டங்களுக்கு அமையவே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

குறுகிய அரசியல் நோக்கத்தைக் கருத்திற்கொண்டு அனைத்து அபிவிருத்தித் திட்டங்களிலும் குறைகண்டால் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. -என்றார். (ஒ-4)

## சிசுவுக்கு எமனாகியது வாழைப்பழத்துண்டு

கொழும்பு, டிசெ.14

வாழைப்பழத்துண்டு தொண்டையில் சிக்கி 11 மாத சிசு ஒன்று நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளது.

அஹங்கம எத்துன்கெலே தோட்டத்தைச் சேர்ந்த ஆண் சிசுவே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

வாழைப்பழத்துண்டு சிக்கியதையடுத்து குறித்த சிசு, அஹங்கம கிராமிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)


**மணமகன் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1994 இல் பிறந்த கார்த்திகை நட்சத்திரம் கி.பா.47 உடைய HND IT படித்த மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.

விளம்பர இல.JF/1032
C/O உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**தேவை**

கிளிநொச்சியில் உள்ள பிரபல புடைவைக் கடைக்கு அனுபவம் மிக்க உதவியாளர்கள் தேவை. இருபாலாரும் விரும்பத்தக்கது. (CS 41602)(3.6)

தொடர்பு: 077 373 4109

**பணியாளர்கள் தேவை**

யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள மொத்த விற்பனை நிலையம் ஒன்றிற்கு நிருவாக உதவிப் பணியாளர்கள் தேவை. (ஆண் / பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.

076 624 8529 (CS 866)(3.6)

**உடன் தேவை**

கட்டட இடிபாடு (2000 கியூப்) அல்லது பழைய கட்டடங்கள் உடன் தேவை.

076 893 6169 (CR 36723) (3.6)

**வேலையாட்கள் தேவை**

திருநெல்வேலியில் இயங்கும் புடைவைக் கடைக்கு பெண் பிள்ளைகள் தேவை. (CS 872) 1-6

தொ.இல:- 076 306 3306

**வயோதிபர் பராமரிப்பிற்கு ஆட்கள் தேவை**

பெண் வேலையாட்கள் தேவை.
தங்கிநின்று வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது.

077 773 3368 (CS 858)(4.6)

**காணி தேவை**

யாழ் நகர பகுதியில் வியாபார நோக்கத்திற்குரியதான (Commercial Purpose Land) 3 - 4 பரப்பளவுடைய காணி தேவை. (CS 41590) (3 / 6)

தொடர்பு: 076 928 9784

**வேலையாள்கள் தேவை**

நேசம் அரைக்கும் ஆலைக்கு
வேலை ஆள்கள் தேவை.

தொடர்பு: 077 922 2282
(தெல்லிப்பளை K.K.S. Road, 8 ஆம் கட்டை)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோயில் வடக்கு வீதியில்
1 1/2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
1 பரப்பின் விலை - 12 லட்சம்
(லங்கா பாம் அருகாமை)

077 6585 999
077 6234 204

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடை பகுதியில் கணக்கர் வளவு 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு) 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்.
சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 m தூரம்.
பார்வையிடும் நேரம்: காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை
(தரகர் தேவையில்லை)
விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 814 7389
070 705 1655

(CS 41603) 1-6

**பணியாளர் தேவை**

கொழும்பு பம்பலப்பிட்டியில் தங்கிநின்று, முதியவர் (ஆண்) ஒருவரைப் பராமரிக்க பணியாளர் தேவை.

உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம்:- (40,000 ஆயிரத்துக்கும் குறையாமல்) நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

விபரங்களுக்கு
077 5222236




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.